Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 20

23 JUN 1971

# ஈழநாடு

வார மலர்




மலர் 13 | ஆனி 8 | ரபி: ஆகி 28 | (22—6—71) | செவ்வாய்க்கிழமை | இதழ் 130

# எம். பி. க்களின் டெலிபோன்: ரூ. 3 கோடி 50 லட்சம் நஷ்டமாம்

## இலவச அழைப்புக்களை ரதுச் செய்ய அமைச்சு யோசனை

கோட்டை, திங் பாராளுமன்ற உறுப்பினர்களும் இனி டெலிபோன் தொடர்புகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டிவரும்.

இத்தகவலை தபால்தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

எம். பி க்களுக்கு தபால் டெலிபோன்தொடர்புகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள சலுகைகளை இதன்பின் மேற்படி கட்டணத்தை அறவிடலாமென திரு குமாரசூரியர் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளார்.

இந்தப் புதியயோசனையை அமைச்சரவை ஏற்குமென தபால்தந்தித் தொடர்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார்

எம். பி க்களின் தபால் டெலிபோன் தொடர்புகளில் மட்டும் அரசாங்கத்துக்கு சுமார் மூன்று கோடியே 50 லட்சம் ரூபா செலவாகுவதாக தபால் அமைச்சர் எடுத்துக் கூறியுள்ளதாக இந்த அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் பெருமளவு எம். பி க்கள் பேரில் மற்றவர்கள் தொடர்பு கொள்வதற்காகச் செலவு செய்யப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதற்கிடையே பல எம். பி க்கள் தமக்கு விசேஷ டெலிபோன் தொடர்புகள் குறிப்பிட்ட நேரத்தில் கிடைப்பதில்லையென தபால் தந்தி தொடர்பு அமைச்சருக்கு புகார் செய்துள்ளனராம்.

அரசாங்க இலாகாக்களின் இலவச தபால் போக்குவரத்துச் சேவையையும் நிறுத்துவதற்கு அமைச்சு ஆலோசித்து வருவதாக ஏற்கனவே செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே

### தாய்லாந்தின் அன்பளிப்பு

(எமது நிருபர்)

தாய்லாந்து, இலங்கைக்கு 100 தொன் அரிசியையும் 10 தொன் சீனியையும் அன்பளிப்பாக வழங்கவுள்ளது'

பாரிசிலிருந்து மறைந்த சோவியத்

## விண்வெளி ஆராய்ச்சி நிபுணர் லண்டனில்

லண்டன், ஜூன் 21

சோவியத் விண்வெளி ஆராய்ச்சி நிபுணர் பிரிட்டனில் இருப்பதாக லண்டனில் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் விண்வெளி ஆராய்ச்சி நிபுணர் திரு. அனமோலி பெட்ரோவிஸ்கி மே மாதம் 27ம் திகதி பாரிசில் தான் தங்கியிருந்த விடுதியிலிருந்து மறைந்தார். இவர் பாரிசிற்குச் சென்ற சோவியத் தூதுக் குழுவின் முக்கிய பிரதிநிதியாக விளங்கினார்.

சோவியத் யூனியனின் விண்வெளித் திட்டங்களிலும், குறிப்பாக லூனா' சோயுஸ் போன்ற மிகப் பெரிய விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்களில் முக்கிய பங்கு வகித்த இவருக்கு 62 வயதாகிறது. இவர் லண்டனில் இருப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதுபற்றி அபிப்பிராயம் தெரிவிக்க லண்டனிலுள்ள சோவியத் தூதராலயம் மறுத்துவிட்டது.

### பூம்புகாரில் கலைக்கூடம்

சென்னை, ஜூன் 21

முன்னாள் சோழ சாம்ராச்சியத்தின் தலைநகராகிய பூம்புகார் இருந்த இடத்தில் கலைக்கூடம் ஒன்றை 4 லட்சம் ரூபா செலவில் அமைக்க தமிழ்நாட்டு அரசாங்கம் நிர்மாணித்துள்ளது.

இளங்கோவடிகள் சித்தரித்த சிலப்பதிகாரத்தை பிரதிபலிக்கும் சிற்பங்கள் இக்கலைக்கூடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

சரித்திரப் பிரசித்திபெற்றதும் பல்லவர் காலத்தில் பிரசித்தி அடைந்ததுமான சிற்பங்களுள்ள மாமல்லபுரத்தில் இக்கலைக் கூடத்தில் அமைக்கப்படவுள்ள சிற்ப வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

## இரத்தம் சிந்தும் சிலுவை

சிசிலி நாட்டைச் சேர்ந்த சிராகூஸ் நகரிலே ஒரு வீட்டிலுள்ள சிலுவையிலிருந்து மனித இரத்தம் சிந்துவதாக ஜினீவா பல்கலைக்கழக அரசாங்க ஆய்வுகூடத்தார் அறிவிக்கின்றனர்.

இரத்தத்தை ஆராய்ந்ததில் "ஏ", "பீ" பிரிவு மனித இரத்தமாகவுள்ளதாகவும், அவ்வீட்டில் யாருக்கும் "பீ" பிரிவு இரத்தம் இல்லையென்றும் தெரிகிறது.

"நான் அரசியலில் இடதுசாரி. அற்புதங்களில் நம்பிக்கையற்றவன். ஆனால் இந்தச் சிலுவையிலிருந்து இரத்தம் வருவது விசித்திரமாக உள்ளது" என்று கியூசிப்பிஸோ என்ற தொழிலாளி கூறுகிறார் அவரது மனைவியான மேரியா பிஸோதான் அந்தச் சிலுவையை விலைக்கு வாங்கி வீட்டில் வைத்திருக்கிறார்.

சென்ற நவம்பர் மாதம் 29ந் திகதி முதல்முதல் சிலுவையில் இரத்தம்சிந்துவதை மேரியா பார்த்து, அதைத்துடைத்தார். பின்பு பலமுறை இரத்தம் சிந்தியதாம். சிலுவையை ஓர் அறையில் பூட்டி, சாவியைக் கத்தோலிக்க டாக்டர்கள் சங்கத்தலைவரிடம் கொடுத்துள்ளதுடன் அந்த இரத்தத்தைப் பரிசோதிக்க ஜினீவாவுக்கு அனுப்பி வைத்தனர்.

அச்சிலுவையைச் செய்த கம்பெனி, முன்னர் "மடோனா' சொரூபத்தைச் செய்ததாகவும் அது சிராகூஸில் "கச்சவிட்டு அழுததாகவும் உள்ளூர்மக்கள் கூறுகின்றனர். பிஸோ குடும்பத்தாருக்கு தபால்மூலம் ஏராளமான பணம் அனுப்பப்பட்டதை அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டதாகவும், ஜினீவா செய்தி தெரிவிக்கிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம்

# இன்னும் 9 வருடத்துக்குள் நிறைவேற்றப்பட்டுவிடும்

## பிரதமர் கூறுகிறார்

கோட்டை, திங்கள் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை இனிமேல் அரசாங்கம் துரிதமாக அமுல் நடத்தும் என்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று ஆட்சி மன்றத்தில் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின்கீழ் இந்தியர்களாகப் பதிவுபெற்றவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும்வேலையை அரசாங்கம் தீவிரப்படுத்துமென்றும் ஒப்பந்த அமுலில் ஏற்கனவே அதிக தாமதம் ஏற்பட்டுவிட்டதினால், எஞ்சியுள்ள காலக்கெடுவுக்குள் ஒப்பந்தத்தை விரைவில் அமுல்நடத்த வேண்டியிருப்பதாகவும்பிரதமர் கூறினார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்பற்றிய திருத்தமசோதா மீது பிரதமர் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

இம்மசோதாமீது வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்தின பேசுகையில், கடந்த அரசாங்கம் திரு தொண்டமானின் விருப்பத்துக்கமைய இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மாற்றிக்கொண்டு அதை அமுல் நடத்துவதைத் தாமதப்படுத்தியது என்றார்.

இதற்குப்பதிலளித்த முன்னாள் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா பேசுகையில், தமது அரசாங்கத்துக்கு அப்போதிருந்த அந்நிய செலாவணித் தட்டுப்பாடு காரணமாக வருடமொன்றுக்கு 35 ஆயிரம்பேரை இந்தியாவுக்கு அனுப்புவது சுலபமான காரியமாக இருக்கவில்லையென்றும், இதனாலேயே ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதென்றும் சொன்னார்.

[12ம் பக்கம் பார்க்க]

### 'மகாகவி' காலமானார்

யாழ்ப்பாணம், செவ்வாய் ஈழத்தின் பிரபல கவிஞர்களில் ஒருவரான "மகாகவி நேற்றுக் காலமானார் "மகாகவி' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதிவந்த திரு ரி உருத்திரமூர்த்தி சாவகச்சேரி அபிவிருத்தி அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி சிலமாதங்களுக்கு முன்னர் உத்தியோக மொழி இலாகாவின் உதவி ஆணையாளராக நியமனம் பெற்றிருந்தார்

"கண்மணியாள் காதை", "குறும்பா", "கோடை", "வள்ளி" ஆகிய நூல்களின் ஆசிரியரான திரு உருத்திரமூர்த்தியின் பூதவுடல் நேற்றிரவு அவரது சொந்த ஊரான அளவெட்டிக்குக் கொண்டுவரப்பட்டது இன்று பிற்பகல் ஈமக்கிரியைகள் நடைபெறவிருக்கின்றன

### ஊரடங்கு நேரம்

இரவு 10-00 மணி முதல் காலை 4-00 மணி வரை

# முதல் தேசிய சபையின் ஆயுளும் அரசியல் நிர்ணய சபையும்

தேசியசபையின் ஆயுட்காலத்தைப்பற்றிய ஏழாவது அடிப்படைத்திர்மானத்தைக் குறித்து அரசியல் நிர்ணயசபையில் பலத்த கருத்துவேற்றுமைகள் இருந்தன. புதிய அரசியல்திட்டம் நிறைவேற்றப்பட்டதிகதியிலிருந்து முதல்தேசியசபை ஆறுவருட காலத்துக்கு நீடிக்குமென்றும் அச்சபையில் அரசியல் நிர்ணயசபையிலுள்ளவர்களே அங்கம் வகிப்பரென்றும், எந்தத் தேசியசபையும் ஆறுவருட காலத்துக்குமேல் இருக்கப்படாதென்றும் இத்திர்மானம் தெரிவிக்கின்றது.

புதியசபையின் ஆயுட்காலம் ஆறுவருடமாக இருக்கப்படாதென்றும் நான்குவருடமாகக்குறைக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஐந்து வருடமாக்கவேண்டுமென்றது மற்றொரு திருத்தம். முதல் தேசியசபையின் ஆயுட்காலம், இப்பார்லிமென்ட்சபை முதலில்கூடிய நாளிலிருந்து ஐந்துவருடமாக இருக்கவேண்டுமென்று மற்றோர் பிரேரணை தெரிவித்தது. உலகிலே ரஷ்யா முதலிய சோஷலிசநாடுகளிலும் மக்கள் பிரதிநிதிசபையின் ஆயுள் நான்கு அல்லது ஐந்து வருடமேயென்றும், இலங்கையிலே இப்போதுள்ளசபை எட்டுவருடங்களுக்கு நீடிக்கப்படுவதாக இருக்குமென்றும், பொதுமக்களின் வாக்குரிமையை அவ்வளவுகாலத்துக்குப் பறிப்பதுகூடாதென்றும் வாதிக்கப்பட்டது.

இதற்கு அரசியல் அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அளித்த பதிலில், இப்போதுள்ள ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு, புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பையும் அதிகாரத்தையும் பொதுமக்கள் வழங்கியுள்ளதாகவும், இதைத்தயாரித்து நிறைவேற்றும் வேலை அதிக கடுமையானதென்றும் மேலும் பயங்கர இயக்கத்தை அடக்குவது போன்ற வேறு பொறுப்புகளும் இருப்பதால், தேசிய ஆக்கவேலைகளைச் செய்ய போதிய அவகாசமில்லை என்றும் தேசியசபையின் ஆயுட்காலம் ஆறு வருடகாலமென்று ஏற்படின் முதற் சபையின் ஆயுளைமட்டும் குறைக்க நியாயமில்லை என்றும் வாதித்தார். திருத்தப் பிரேரணைக்கு சாதகமாக 15 பேரும் எதிர்த்து 75 பேரும் வாக்களித்தனர்.

"பராசரன்"

முடிவில் அமைச்சரின் பிரேரணை வாக்கெடுப்பின்றியே நிறைவேறியது. அதாவது இப்போதுள்ள ஜனப்பிரதிநிதிசபையினர் சுமார் 8 வருட காலத்துக்கு தங்கள் பார்லிமென்ட் பதவிகளை நீடித்துக்கொண்டதாகின்றது.

இவ்விதம்நீடித்துக்கொள்ள இச்சபைக்கு பொதுமக்கள் அதிகாரம் அளிக்கவில்லை என்றும் இது வாக்காளரின் ஜனநாயகஉரிமையை பறிப்பதாக இருக்குமென்றும் வாதிக்கப்பட்டது. புதிய தேசியசபையின் ஆயுள் காலத்தை இதற்காகக் குறைக்கப்படாதென்றும் அப்படிச்செய்தால் அச்சபையால் உருப்படியான எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாதுபோகுமென்றும் அமைச்சர் சரியாக வாதித்தார். இந்தியாவிலே அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி அது தயாரித்த அரசியல் திட்டத்தை நிறைவேற்றிவைக்க பொதுத் தேர்தல் நடத்தி புதிய பார்லிமென்ட் சபையைக்கூட்டினர். அதேபோல இலங்கையிலும் செய்தால் அதாவது அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டதும் பொதுத்தேர்தலை நடத்துவதாயின் புதியதிட்டத்துக்குப் பொதுமக்களின் ஒப்புதலைப் பெறுவதாகவுமிருக்கும்

புதிய தேசிய சபையின் பொறுப்பும் கடமையும் சுலபமானதன்று. ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள அரசியல் தவறுகளை மீண்டும் செய்யாமல், தேசிய ஒற்றுமையைக்காத்து முன்னேற்றத்துக்குவழிசெய்யவேண்டியுள்ளது. அப்படிச் செய்வதன்மூலமே மக்களின் பல முக்கிய பிரச்சினைகளையும் தீர்க்கமுடியும். புதிய அரசியலை வகுப்பதற்கான நோக்கமும் இதுவே. இதில் கருத்துவேற்றுமைகளுக்கு அதிக இடமுண்டுதான். மற்றவர்களின் கருத்துக்கும் அதிக மதிப்பளித்து, சமரச முறையில் இவ்விஷயங்களைத் தீர்த்துக்கொள்வதே விவேகமாகும். கட்சிமுறையின்றி அரசியல் நிர்ணயசபை தேசிய முறையிலேயே செயலாற்றுவதாகக் கூறப்படுகிறது, அப்படியாயின் மற்றவர்கள் கூறும் யோசனைகளில் சிலநல்லவைகளை ஏற்று புதிய அரசியலைத் தயாரிப்பதே இங்கு ஜனநாயகம் தழைக்கவும் மக்கள் அமைதியாக, சுபீட்சமாக வாழவும் வழிசெய்வதாகும். ஜனநாயகத்தின் வெற்றி பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒத்துழைப்பதில்தான் அடங்கியுள்ளது.

# ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரன் தோன்றிய வரலாறு

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரர்ஆலய வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாவதையொட்டி ஆலயத்தின் வரலாறு பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது இக் கட்டுரை.
[ஆர்]

இரா. பத்மநாதன் (ஒட்டுசுட்டான்)

நீர்வளமும் நிலவளமும் பெற்று நெல்வளமாய் திகழும்நாடு வன்னிநாடு. வீரத்துக்குப் பெயர்போனநாடு. ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து இறைசெலுத்த மறுத்த மாமன்னன் பண்டாரவன்னியன் ஆட்சிபெற்ற புகழ்நாடு. இத்தகைய நாட்டின் மத்தியாகிய ஒட்டுசுட்டான் கிராமத்தில்தான் முதல்வனாக ஈசுபரன் தானாகவே தோன்றினார் என்றால் வன்னி மக்களின் தெய்வநம்பிக்கை புலனாகுமன்றோ. இதன்பின்னர்தான் மட்டக்களப்பிலுள்ள கொக்கட்டிச்சோலையிலும் ஓர் ஈசன் தோன்றினார், ஈழநாட்டின் நாலாபக்கங்களிலுமுள்ள மக்களுக்கு ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரன் என்றால் தனிப்பெரும் பிரேமை. எந்த மதத்தைச் சார்ந்தவர்களும் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர். அழகிய வேலைப்பாடுகளும் மணிக்கோபுரத்தின் மாண்புறு தோற்றமும்கொண்ட இவ்வாலயத்தின் மூலஸ்தானத்திலே கன்னங்கரேலென்று ஜொலித்துக்கொண்டிருக்கும் சுயம்புலிங்க மூர்த்தி பார்ப்போர் உள்ளங்களை மெய்மறக்கச் செய்துவிடும். இங்கு ஈசனின் சந்நிதியாக விளங்கும் அம்மையாரின் அருளும் அளப்பரியது.

'வான்தோன்றி மண் தோன்றாக் காலத்தானே வண்மைசெறி திருவேகாவனத்திறைவனே, மான்தோன்றும் நாதவிந்து வடிவக்காணே மங்கைபூலோகநாயகி இடப்பாகத்தானே, தேன்தோன்றும் கொன்றைபுனை தெய்வமாகி தீவினைகள் அகற்றுவிக்கும் தேவன்தன்னை, தான்தோன்றிதான் தோன்றி எம்பிராகில் தவ்வாத புனற்தோன்றி நீங்கலாமே'.

ஸ்தலவிசேஷம், மூர்த்திவிசேஷம், தீர்த்த விசேஷம் கொண்ட இவ்வாலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் பலவுள. மிகப் பழமைவாய்ந்த இவ்வாலயத்தில் எழுந்தருளிய ஈசனை வேகாவனப்பெருமான் என அழைப்பர். இவ்வீசனின் தோன்றலுக்கும் விவசாயத்துக்கும் அதிக சம்பந்தம் உண்டு என்றால் மிகையாகாது. ஈசன் தானாகக்காட்சி கொடுத்த இடத்திலே அக்காலத்தில் ஒரு விவசாயியால் குரக்கன் தானியம் விதைக்கப்பட்டு அறுவடை செய்யும் சமயம் குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டும் மீண்டும்மீண்டும் தானியம் தழைத்தபடியே இருந்தது. இதைக்கண்ட விவசாயி வெட்டியநட்டு திரும்பத்திரும்ப தழைப்பதன் காரணத்தால் தீயை மூட்டிவிட்டான். ஆனால் குறிப்பிட்ட ஒருஇடத்தில் மட்டும் தீப்பிடிக்காமல் இருப்பதைக்கண்ட அவன் ஆச்சரியப்பட்டு அவ்விடத்தைமண்வெட்டியால் வெட்டித் துப்பரவுசெய்யும் சமயம் கல்லாய்க்கிடந்த ஒரு திடலையும் வெட்டினான். வெட்டப்பட்டு கல்லிலிருந்து இரத்தம் வழிந்து ஓடக்கண்ட விவசாயி அயலில் உள்ளவர்களை அழைத்து ஈசனின் அற்புததோன்றலைக் காட்டியபோது ஈசன் மீண்டும் ஒரு உயரத்துக்கு வளர்ந்துவந்த காட்சியையும் மக்கள் கண்டனர்.

'ஒட்டுசுடவேகாதது
உன்அருளோ இல்லையோ
கிட்டவந்தும் என்பாவிகுரலை
கேட்கவில்லையோ
என்நாதநீ என்மீது
இரங்குவது எந்நாள்'

இவை நிகழ்ந்த அன்று இரவே ஈசன் விவசாயியின் கனவில்தோன்றி எனது அற்புத தோன்றலை நேரில்கண்ட நீ எனக்கு ஒரு சிறிய கொட்டில்போட்டு எனது தோற்றத்தின் காரணப் பெயரையே எனக்கு இட்டு பூசை செய்யும்படி கூறி மறைந்தார். மறுநாள் விடிந்ததும் அவ்விவசாயி பொதுமக்களைக்கூட்டி நடந்தவைகளைக் கூறி கனவையும்கூறி கொட்டிலும் போட்டு வெட்டிய ஓட்டுக்கு தீவைத்தமையால் ஒட்டுசுட்டான் என்றும் ஈசனார் தீயினால் வேகப்படாமையால் வேகாவனப்பெருமான் எனினும் காரணப் பெயரையே வைத்து தினபூசையும் நடைபெற்றுவந்தது. காலப்போக்கில் இக்கிராமத்தின் பெயரும் ஒட்டுசுட்டான் என்று வழங்கலா

(11-ம் பக்கம் பார்க்க)


## தேசிய லொத்தர் சபை
## தேவை

தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகள் விற்பனை செய்வதற்கு பின்வரும் தொகுதிகளில் ஏஜென்டுகள்:

| | |
|---|---|
| காங்கேசன்துறை | நல்லூர் |
| வட்டுக்கோட்டை | கோப்பாய் |
| காங்கேசன்துறை | உடுப்பிட்டி |
| உடுவில் | பருத்தித்துறை |
| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |

தொகுதி, விற்பனை நிலைய விலாசம் மற்றும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்க.

502/1, காலி வீதி.
கொழும்பு-3.

பொது முகாமையாளர்,
தேசிய லொத்தர் சபை.


## நாடு நலம்பெற கோளறுபதிக பாராயணம்
### ஒருபெரியார் வேண்டுகோள்

தற்போது ஏற்பட்டிருக்கும் அபாயத்திலிருந்து நாட்டைக் காப்பதற்கு தினமும் கோளறுபதிகத்தைப் பாராயணம் செய்யுமாறு ஒரு சைவப் பெரியார் சைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தர் பாடியருளிய கோளறுபதிகத்தைப்பாராயணம் பண்ணுங்கள். முழுவதும் முடியாவிடில் கீழ்க்காணும் மூன்று பாடல்களையாவது பாராயணம் பண்ணுவது நல்லது. கோளறுபதிகத்தின் சக்திக்கு எதிராக எத்தனை கோடி மக்கள் திரண்டாலும் அவர்கள் சக்தி பயனற்றுப் போய்விடுமென அவர் உறுதி தெரிவிக்கிறார்.

நாட்டின் நன்மையில்கருத்துள்ள மக்கள் யாவரும் பக்தியுடன் இதைப் பாராயணம் செய்துவரும்படியும், தவறின்றிப் பாராயணம் செய்யவேண்டியது முக்கியமென்றும் தவறாது கோளறுபதிகம் பாராயணம் பண்ணும்படியும் அப்பெரியார் கேட்டுக்கொள்கிறார். அதோடு கோளறுபதிகம் பாராயணம் பண்ணுபவர்களை எவ்வித கெடுதியும் அணுகாது என்றும் கூறுகிறார்.

கோளறுதிருப்பதிகம்
திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார்பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரைவந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணைநமதே.

சிறுகதை

# ஆசை வெறி

## எஸ். பி. கிருஷ்ணன்

வள்ளி என்ற வடிவுக் கன்னி "பல்மேரா கொட்டேஜ்' என்ற பெயருடைய கள்ளுக்கடை முதலாளியின் மகள் மாநிற மேனியள். மதியைப் பழிக்கும் முகத்தினள். கயலை வென்ற கருவிழிகள். அந்த விழிகளின் காந்தத்தினால் தாக்குண்டு தன் மனதைப் பறிகொடுத்து வள்ளியைத் தன் நெஞ்சில் வைத்துக்கொண்டவன் கமலநாதன்.

வள்ளி சில வேளைகளில் தெருப்படலையைத் திறந்து, புதினம் பார்க்கும் பாசாங்குடன் கமலநாதனின் வருகையை எதிர்பார்த்து நிற்பாள்.

கமலநாதன் காலையில் காரியாலயம் போகும்போதும் மாலையில் வீடுதிரும்பும்போதும் வள்ளியைக் கண்குளிரக்கண்டு மகிழ்வான். காணாதவேளைகளில் முகம்வாடி மனம்வருந்திச் செல்வான்.

அவன் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வந்த பின்னர்தான் 'நல்ல வெய்யிலை' உணர்ந்தான். பாலைவனத்திலே பசும் சுனைகள் போல் வெய்யில் கொழுத்தும் யாழ்ப்பாணத்தின் வயிற்றைக் குளிரவைக்கும் இனிக்கும் பனங்கள்ளு விற்பனையாகும் கொட்டில்கள் ஆங்காங்கே காட்சியளித்தன. அவை கமலநாதனுக்கு நன்கிருந்தாயின. அவன் கடமை புரியும் காரியாலயத்திற்குக் கிட்டவும் அத்தகையதொரு கொட்டில் இருந்தது.

கொழும்பிலே கசிப்புக் கலந்த சாராயத்தையும் தண்ணீர் கலந்த பியரையும் மாறிமாறிக் குடித்து வாடிப்போன கமலநாதனுக்கு யாழ்ப்பாணத்திலே கிடைத்தகுளிர்மையான உடலுக்கு உவந்த பனங்கள்ளு, ஆச்சரியமான பலனை அளித்தது. உழைக்கும் தொழிலாளி களைத்துத் திரும்புகையில் குடித்துப் பசியாறும் புளிச்சல் கள்ளையே முதலில் அவனும் விரும்பிக் குடித்தான். அவனுக்கு இனிக்கும் கள்ளை குடிக்கப்பழக்கியவள் வள்ளி.

வள்ளி, கந்தையன் இல்லாத வேளைகளில் வாடிக்கைக்காரருக்கு கள் ஊற்றிக்கொடுப்பாள். அவர்களிடையே நம் கதாநாயகனும் ஒருவன். அவனுக்கென்ற 'ஸ்பெஷல்' கள்ளு காத்திருக்கும் வள்ளியின் கண்காணிப்பில்!

வள்ளியுடன் வாய்விட்டுச் சில வார்த்தைகள் பேசி, அவள் உள்ளக்கிடக்கையை உணர்ந்துகொண்டு. தன் காதலை வெளியிடத் தருணம் பார்த்துவந்த கமலநாதனுக்கு அன்று ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

0 0 0

"ஏன் வள்ளி எனக்குப் புதுக்கள்ளை ஊற்றுகிறாய், இது வெறிக்காதே...ம்"

கள்ளை ஒருதரம் உறுஞ்சிவிட்டு நிமிர்ந்து வள்ளியின் கண்களை வெறித்துப் பார்த்தான் அவன்.

ஒரு நாணச் சிரிப்பு!

படக்......படக்கென அடித்த அவன் இதயம்......சில கணங்களில் கட்டுப்பாட்டுக்கு மீண்டது.

ஒருவித இன்பக் கிளுகிளுப்பு, மீதிக்கள்ளை ஒரே மூச்சில் குடித்து முடித்தான் நிமிர்ந்த—

'ஏன் வள்ளி சிரித்தாய்' என்று கேட்டான். 'இங்கு வாற மற்ற உத்தியோகத்தர் புதுக்கள்ளைக் கேட்டுக் குடிக்கினம்; உங்களுக்கு ஏன் பழங்கள்ளில விருப்பம்...?'

'வள்ளி! நீ நன்றாக நலமாகப் பேசுகிறாய் நீ எத்தனைமட்டும் படித்திருக்கிறாய் வள்ளி?'

'நான் ஐந்தாம் வகுப்போடை நிண்டிட்டன்'

'என்ன...? நீ கனக்கப் படிச்சவளைப்போலை... இருக்கிறாய் ம்...வள்ளி...என்றுனக்கு யார் பெயர் வைச்சது. நல்ல பெயர். நாகரிகமான பெயர்'

'எங்கடை ஆச்சி இப்படித்தான் பெயர் வைப்பாங்கள் இது கூடாத பெயரெண்டு அப்பு என்னை வள்ளிப்பிள்ளையெண்டு கூப்பிடுவார்...'

'அது தவறு வள்ளி...... வள்ளி நல்ல தமிழ்ப் பெயர் பிள்ளை தேவையில்லையே...'

"கேலியா செய்கிறீங்கள்...?'

"இல்லை வள்ளி கருத்தோடுதான்......'

'அப்ப இனிமேல் அப்புவிட்டை புதுக்கள்ளைக் கேட்டு வாங்கிக் குடியுங்கோ......'

"ம்...... உனக்கு ஏன் என்னிலை இவ்வளவு அக்கறை வள்ளி' நான் கேட்கிற கள்ளை ஊற்று. காசை வாங்கிப் பெட்டியிலை போடு...... என்ன தெரியுதா?'

பொய்க்கோபம் காட்டிப் பதறியவன் அவள் கண்களைக் கூர்ந்து கவனித்தான்

வள்ளி நாணித் திரும்பினாள் மறுபக்கம் அதே வேளை படலையை யாரோ திறக்கும் சத்தம் கேட்கிறது

'கந்தையாண்ணை...கந்தையாண்ணை...வள்ளி ... கொப்பர் இல்லையோ பிள்ளை ...?''

''நான் வருகிறேன் வள்ளி...''கமலநாதன்விடை பெறுகிறான்.

''சரி...''

அவன் மறையும் வரை வள்ளியின் கண்கள், படலை வரை போகின்றன.

''பின்னை பழம் கொஞ்சம் எடுமோனை''.

வந்தவன் வள்ளியின் கண் போன போக்கைக் கவனிக்கிறான்.

சட்டென்று திரும்பிய வள்ளி, வெறுப்போடு, இருங்கோ அப்பு வந்திடுவார்...என்று சொல்லி அவனைக் காத்திருக்க வைத்துவிட்டு, எங்கோ ஓடிமறைகிறாள்

சந்திப்புகள் இப்படிப் பல தொடர்ந்தன. காதல்வெறி வளர்ந்தது.

வெறி வேதனையைத் தந்தது வள்ளிக்கு.

வெறி காதலைத் தந்தது கமலநாதனுக்கு.

வள்ளியின் நெஞ்சிலே, பயங்கரக் கற்பனைகள் எழாமலில்லை. அவன் படித்தவன், உத்தியோகத்தன், பெரிய இடத்துப்பிள்ளை. என்னைக் கலியாணம் செய்து கொள்ள, ஒப்புமா இந்த உலகம்...? இப்படிப் பலபல எண்ணங்களின் தாக்கத்தால் கண் கலங்குவாள், வள்ளி.

எந்தவிதமான உயர்வு தாழ்வும், கமலநாதனுக்குத் தெரியவில்லை. அவன் எதையும், துணிந்தபின் எண்ணி ஏங்கி கண்கலங்கிப் பின் வாங்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல. வள்ளி, கந்தையனின் மகள் என்று தெரிந்து கொள்ளுமுன்பே, அவளைத் தெருப்படலையில் கண்டு, அவளிடம் மனதைப் பறிகொடுத்தவன், அவன். அந்தக் கள்ளுக்கொட்டிலுக்குப் பின்னால் இருக்கும் வீட்டில்தான் வள்ளி இருக்கிறாள் என்று தெரிந்த பின்னர் தானே அங்கே 'கள்ளடிக்கப்' போய்வந்தான். அவளோடு பேசவேண்டும், பழகவேண்டும் என்பதற்காகத்தான் வாடிக்கைகாரர் இல்லாத வேளைகளில், கந்தையன் இல்லாதவேளைகளில் கள்ளுக் குடிக்கப்போனான். எனவே அவன் எண்ணித் துணிந்த கருமம் அது. துணிந்தபின் எண்ணும் கோழையல்ல அவன். ஊர், உலகம் என்ன சொல்லும்...? அந்த ஆராய்ச்சியில் இறங்கவில்லை அவன். அது தேவையில்லை. இத்தகைய காரியத்தை முதலில் எதிர்க்கும். முடிவில் ஏற்கும். அது இயல்பு என்று அவனுக்குத் தெரியும்.

கமலநாதன் யாழ்ப்பாணம் வந்து மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. வள்ளி - கமலநாதனின் தொடர்புக்கு வயது இரண்டு. இன்னும் ஓராண்டுதான், அவன் யாழ்ப்பாணத்தில் கடமை செய்யமுடியும். நாலாவது ஆண்டு முடிவில் மீண்டும் கொழும்பிற்கோ வேறுநாட்டிற்கோ மாற்றலாகிப்போய் விடுவான். எனவே அதற்குள்ளாக வள்ளியைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். அதற்கொரு வழி; ஒரு திட்டம்; ஒரு சதியாலோசனை! சரி! அவன் வழிவகுத்துக்கொண்டான்!

அன்று கமலநாதன், கந்தையனின் கள்ளுக்கொட்டிலில் தனியே இருந்து கள் குடித்துக்கொண்டிருந்தான். நல்லவெய்யில். வள்ளிகள்ளை வடித்து ஊற்றிக்கொண்டிருந்தாள்.

இன்னும் ஓராண்டு முடிய கமலநாதன் யாழ்ப்பாணத்தை விட்டுப்போய்விடுவான் என்று வள்ளிக்குத் தெரியாது. கள்ளங்கபடமற்ற வள்ளியின் வாயிலிருந்து ஒரு அற்புதமான கேள்வி பிறந்தது.

''கமலன் ...நீங்கள் இந்தக் கள்ளுக் குடிப்பதை நிறுத்த மாட்டீர்களா...?''

''வள்ளி! உன்னைச் சந்திக்கவும் காதலிக்கவும், காரணமாய் இந்த கள்ளைக் குடிக்காமல் விடுவது நன்றியாகாதே''.

''இங்கிருக்கும் வரை தானே குடிப்பீர்கள்...திரும்பவும் உங்களை மாற்றிவிட்டார்கள் என்றால், என்ன செய்வீர்கள்?''

''என்ன? என்னை மாற்றிவிடுவார்களா. இது உனக்கு எப்படித்தெரியும் வள்ளி?''

''ஏன் தெரியாதா...?''

வள்ளியின் கண்கள் கலங்கின.

அக்கணமே தான் குற்றவாளிக்கூண்டிலே நிற்பதாக உணர்ந்தான் கமலநாதன்.

இவளுக்கு எப்படித் தெரியும்...? ஒருநிமிடம் சிந்தித்தான். ஒரு முடிவுக்கு வந்தான் வள்ளியின் கன்னத்தைத் தட்டிவிட்டுச் சொன்னான்:

'வள்ளி — நான் இந்த வருட முடிவில் போகத்தான் பேசுகிறேன். போகும் போது உன்னையும் அழைத்துப்போகத்தான் நினைத்திருக்கிறேன். வருவாயா ...? வள்ளி.'

'இது வெறும் வெறிவார்த்தைகளா அல்லது...?'

'வெறியா? எனக்கா? ... வள்ளி! இந்தப் புதுக் கள்ளு இனிக்குது வள்ளி ... — உன் பேச்சோ அதைவிட இனிக்குது வள்ளி. நான் போகும் நாளை பிறகு சொல்லுகிறேன். என்னோடை ஓடிவர உனக்கு நெஞ்சுரம் இருக்கா சொல்லு வள்ளி ...? அதைவிடவேறுவழியில்லைவள்ளி... திரும்பவும் கொழும்பிற்குத் தான் போவதற்கு வழிசெய்திருக்கிறன் அங்கேபோவிட்டால், நான்பெரிசு நீ சிறிசு என்டு எவரும் சொல்ல மாட்டார்கள். அங்கே நீயும் நானும் தம்பதிகள், அது ஒரு புதுஉலகம் வள்ளி. இதைப்போல அநாகரிக உலகம் இல்லை நீ எதுக்கும் பயப்பிடவேண்டாம். என்ன சம்மதந்தானே...?'

வள்ளி தீர்மானித்துவிட்டாள். தலையசைத்தாள். அவள் பத்துவரை படிக்காவிட்டாலும். பலதும்பத்தும் தெரிந்தவள். புது உலகம் புரிந்தவள். காதலைப் புனிதமாகப் போற்றியவள். கமலநாதன் ஒருவனையே காதலித்தவள் அவனையே கல்யாணம் செய்யவேண்டுமென்று விரும்பியவள். அவன் உயர்ந்தவன் என்பதற்கு சட்டம் கிடையாது சமூகம் சீறுமே என்பதற்கு அவள் நெஞ்சில் அச்சம் கிடையாது. வேறென்ன தடை?

வள்ளியைக் காணவில்லை. ஊர்வாய்க்கு ஒரே கொண்டாட்டம். அயலவரில் ஆரவாரம். இனத்தவரின் இரகசிய வசைமொழிகள். இப்படிப் பல சில நாட்கள் தொடர்ந்தன. பின்னர் ஓய்ந்தன

கந்தையன் கொஞ்சம் உலகந்தெரிந்தவன். வழக்கத்திற்கு மாறாக நடக்கக்கூடாதது. ஒன்று நடந்துவிட்டது தான். என்றாலும் அவன் கவலைப்படவில்லை. ஊர்ச் செய்திகளிலிருந்து நடந்ததை ஊகித்தறிந்து உண்மை புரிந்து உள்ளோ மகிழ்ந்து அமைதியடைந்திருந்தான்.

அவனிடம் வரும் வாடிக்கைக்காரர் எவரும் அவனோடு நேருக்குநேர் வள்ளியைப் பற்றிக் கதைக்கவில்லை, பயம். கந்தையன் முதலாளியல்லவா...? இருந்தாலும் - ஊர் வம்பு கந்தையன் காதுகளைத் துளைக்காமல் இல்லை

ஓர் இரவு பத்து மணியிருக்கும் கந்தையனின் கொட்டிலில் கள்ளுக் குடித்துவிட்டு வெறியேறிய இருவர் தெருவிலே மிதந்தபின்னர் அவர்களிடையே நடந்த சம்பாஷணை இது!

'எனக்குத் தெரியும் மச்சான் — இவள்வள்ளி — அந்

(10-ம் பக்கம் பார்க்க)

## காவியத் திருநாள்

[தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள்]

சிரம் சூட்டி எமை ஏற்காமல்
(அரசில்) சில ஓட்டைகளைக் காட்டிடுவார் - நாத
சுரம் காட்டுகின்ற ஓட்டையெல்லாம்
நல்லிசைக்கே என்றிடுவேன்
அசையும் விரலாக நீர் இருந்தால்
இசையும் தென்றலாய் மாறிவிடும் — இற்றைநாளில்!
வான் முட்ட எழுந்து நிற்கும் ஆலையிலே
தான்மட்டும் வாழ்வதற்குச் சிலர் இருந்தால்,
பேன் பிடித்த தலையாகும் நமதுநாடு ... ...
நான் படித்த மருந்து அதற்கு சமதர்மந்தான் ...
அந் நிலைதான் வருதல் மட்டும்
இந்நிலையில் உழைப்போர் வாழ ... ...
வகைகாணல் மிகவும் நன்று ... அதற்கு
வாய்திறந்த சூளுரைப் பாம் இன்று
பூட்டுப் போடவில்லை பொதுவுடைமை கொள்கைதனை
புறக்கணித்துப் பேசவில்லை ...
ஏட்டுக்குள் இருக்கின்ற அக்குறிக்கோள்
நாட்டுக்குள் மெல்லவந்தேதான்
தீரவேண்டும்—சமதர்மப்
பாட்டுக்குள் பொதிந்துள்ள கருத்தெல்லாம்
பரவுமுன்னே! பாங்காகத் தொழில்அமைக
— நம்நாட்டில்
கட்டான அமைப்புகள் பெருகிடவே
பொங்கல்நாளில் புதியபாதை ஏற்றிடுவோம்
இனிய பாதைஇதை இடைக்காலப் பாதை
என்போம் - பின்னர்
கனிய வைப்போம் கற்களையே!
உழவரது வியர்வையில் சூல்கொண்ட,
கழனித்தாய் தன்வயிற்றில் மகளாய்வந்து
அனைவரது பாராட்டும் பெற்றுக்கொண்ட
கதிராம்மங்கை
மணவறையிற் பெண்போல தலைகுனிந்து நிற்கின்றாள்;
பொங்கல் நாளில்
தமிழர் என்போர் மகிழ்கின்றார்
தைதை என்றே குதிக்கின்றார்
தண்ணொளி சேர்ப்பது தையன்றோ
தைப்பதும் ஒருவகைத் தொழிலன்றோ
முள்ளாய்த் தைப்பார் சிலபேர்கள்
நமக்கு முள்ளாய்த் தைப்பார் சிலபேர்கள்
தமிழர் என்போர் மகிழ்கின்றார்
தைதை என்றே குதிக்கின்றார்
என்னைக்
கலைஞர் என்றே அழைக்கின்றார்
தைத்தல் எனது தொழிலல்ல
புதைத்தல் எனது தொழில் என்பேன்
தீமையைப் புதைத்தல் தீதறுசெயலாம்
- இல
லாமையைப் புதைத்தல் இனிப்புறு தொழிலாம்
ஊமைகள்வாழ உயிரைக் கொடுத்த
உத்தமன் காலில் முகத்தைப் புதைத்தல்
எந்தன் தொழிலாம்

# பஞ்சாமிர்தம்

## சீனத்துச் சித்தாந்தம்

நியாயம் இன்னதென்று தெரிந்தும் அதைச் செய்யாதிருப்பது கோழைத்தனம். தெரிந்ததை தெரியுமென்று ஒப்புக்கொண்டு தெரியாததை தெரியாதென உரைத்தல் சால்புடைத்து. மனது வழிபாட்டில் நிற்காவிடில் வழிபட்டதாகவே ஆகாது. வெறும் சோறும் தண்ணீரும், தலையணைக்குப் பதிலாக கையும் கொண்டு ஆனந்தமடையலாம். ஆனால் நற்குணமின்றி செல்வமும் கீர்த்தியும் காற்றால் சிதறிப்போகும் மேகங்களைப் போல்வன. மனிதருக்கு உன்னைத் தெரியவில்லையென்று வருந்தாதே. உனக்கு மனிதர்களைத் தெரியவில்லை என்றும் வருந்தாதே. நல்லவன் எப்போதும் பெருந்தன்மையோடிருப்பான். கெட்டவன் எப்போதும் பயத்தால் பதுங்கி வாழ்கிறான்.

— கொன்ஃபியூஷியஸ்

## அற்ப விஷயங்கள்

இரண்டுபேரும் சமதகுதி வாய்ந்தவர்கள். இவர்களில் யாரை அந்த முக்கியமான மந்திரிப் பதவிக்கு நியமிக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி மாக்கின்லி தமது மண்டையை உடைத்துக்கொண்டிருந்தார். ஒருநாள் இரவு அவர் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது ஒரு வண்ணாரப் பெண் தனது மாராப்புடன் பஸ்ஸில் ஏறி நின்றுகொண்டே வருவதைக் கண்டார். ஒருவராவது எழுந்து தனது ஆசனத்தை அவளுக்குக் கொடுக்க முன்வரவில்லை. மந்திரிப்பதவிக்குப் போட்டியிட்ட இருவரில் ஒருவரும் அந்த பஸ்ஸுக்குள் இருந்தார். அவர் அந்தப் பெண்ணைக் கண்டும் பத்திரிகையால் முகத்தை மறைத்துக்கொண்டு காணாத மாதிரி இருந்தார். பஸ்ஸின் பின்புறத்திலிருந்து இதைக்கவனித்த ஜனாதிபதி மாக்கின்லி பேசாமல் எழுந்து போய் மாராப்பைத் தூக்கிக்கொண்டு அந்த வயோதிப மாதை தமது ஆசனத்துக்கு இட்டுச் சென்றுஉட்காரவைத்தார். மந்திரியாக நினைத்தவர் பத்திரிகையால் தம்மை முழுவதும் மறைத்துவிட்டபடியால் மாக்கின்லியையும் அவர் செய்ததையும் காணவில்லை. சுயநலத்தால், ஓர் அற்ப உதவி செய்யத்தவறிய அவரது நடத்தை அவருக்கு கிடைக்கக் கூடியதாயிருந்த ஒரு பெரிய மந்திரிப் பதவியை அபகரித்துவிட்டதை அவர் கடைசிவரை அறிந்ததில்லை.

## கைக்கடிகாரக் கதை

சுமார் 350 வருடங்களுக்கு முன்பு ஓர் ஆங்கிலேயன் ஸ்விற்ஸர்லாந்து தேசத்திலுள்ள மலைகளுக்கூடாக பிரயாணம் செய்தான். ஒருநாள் அவனுடைய கைக்கடிகாரம் நின்றுபோகவே ஒரு கிராமத்திலுள்ள கொல்லனிடம் கொண்டுபோய் அதைத் திருத்தித்தரும்படி கேட்டான். டானியல் ஜீன் ரிச்சர்ட் என்ற அந்தக் கொல்லன் முன்னொருபோதும் ஒரு கைக்கடிகாரத்தை கண்ணால் பார்த்ததில்லை என்றாலும் முயன்று பார்க்கிறேன் என்று கூறி பட்டடையில் உட்கார்ந்தான். அரை மணி நேரத்துக்குள் அதை ஆக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து அதிலுள்ள பழுதைக் கண்டு பிடித்து திருத்திக்கொடுத்துவிட்டான். அத்துடன் அவன் விட்டுவிடவில்லை. ஆங்கிலேயன் பேசாமற்பட்டு முன்பின் கண்டிராத அந்த வஸ்துவைப் போல இன்னொன்றை ஞாபகத்தைக்கொண்டே செய்து முடித்துவிட்டான் அயலிலுள்ள மற்றக் கொல்லர்களும் கமக்காரரும் இடையர்களும் ஜீன் ரிச்சர்ட் செய்த கடிகாரத்தைப் போல தாங்களும் செய்யப் பழகிக்கொண்டனர். விரைவில் இத்தொழில் ஸ்விற்ஸர்லாந்து முழுவதும் பரவிவிட்டது. மூடுமாரி கப்பிக்கொண்டிருக்கும் ஆறு மாதங்களையும் அமைதியாக ஒரேயிடத்திலிருந்து கழிப்பதற்கு இது ஒரு நல்ல தொழில் என்று ஸ்விஸ் மக்கள் கண்டுகொண்டார்கள். ஸ்விற்ஸர்லாந்தில் சுமார் 2500 கடிகாரத்தொழிற்சாலைகள் இருக்கின்றன. வருடாவருடம் அங்கிருந்து 3 1/2கோடி கைக்கடிகாரங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

## கூல்டின் குறும்பு

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு பிரபல அப்புக்காத்தாய் விளங்கிய நிக்கலஸ் கூல்ட் என்ற யாழ்ப்பாணத் தமிழர் குறும்புகள் செய்வதில் மிகவும் சமர்த்தர். ஒருநாள் கல்லூரியில் அவருடைய ஆங்கிலேய ஆசிரியர் இலக்கணம் கற்பிக்கும்போது 'இரண்டு எதிர்மறைகள் ஓர் உடன்பாட்டைக் குறிக்கும்' (Two positives make one negative) என்று சொல்லிக்கொடுத்தார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கூல்ட் எழுந்து நின்று 'ஸேர் நான் வெளியே போகவேணும்' என்றார். ஆசிரியர் அதற்கு 'இல்லை, இல்லை' (No No)என்றார், கூல்ட் மறு பேச்சில்லாமல் வெளியே போய்விட்டு அடுத்த நாள்தான் வகுப்பில் ஆஜரானார். ஆசிரியர் 'உத்தரவில்லாமல் ஏன் வெளியே போனாய்' என்று கேட்டதற்கு, கூல்ட் 'ஸேர், நீங்கள்தானே இரண்டு எதிர்மறை ஓர் உடன்பாட்டைக் குறிக்கும், என்று சொல்லித் தந்தீர்கள். நீங்கள் 'இல்லை, இல்லை' என்று சொன்னவுடனே நான் போய்விட்டேன்' என்றார். ஆசிரியர் வியந்துப் போனார் அப்பொழுது அவர் சொன்னார். ஒரு நாளைக்கு நீ ஒன்றில் தூக்கு மேடை ஏறுவாய் அல்லது சுப்றீம் கோட் நீதியாசனத்துக்கு ஏறுவாய்' (One day you will mount either the gallows or the Supreme court bench).

# வட மொழிப் பயிற்சியும் தென் மொழிப் புலமையும் சான்ற புலவர் பாண்டியனார்

புலவர் வதியும் நாடே புகழ் பூத்த பொன்னாடாகும். நாட்டின் எழில்கொஞ்சும் இயற்கையையும், மக்களின் நலமான வாழ்வையும் தம் கவிதையினாற் படமெழுதி காட்டவல்லவர் கற்றறிந்த புலவர். இதனாலன்றோ, நாடு காத்த மன்னரும், சங்கம்வளர்த்த சான்றோரும் புலவரைக்கண்டபோது நயத்தோடும், பயத்தோடும் அவருக்குவேண்டுவன கொடுத்துப் போற்றி வந்தனர்.

செம்மைசான்ற புலவர் வரிசையை நாம் இக்காலத்திற்சிந்திக்கும்போது நான்கு முழ வேட்டி உடுத்துத் தனது மெல்லிய மேனியை வெண் துகிலால் மூடி, ஒரு கைபிற்குடைதொங்க வெண்தாடி மார்பிலே அசைய அறிவுக் களஞ்சியமாய், ஆய்வுக் கெட்டா நீருற்றாய், அள்ளக் குறையாத கூவலாய், நற்றமிழ் பயிற்றும் நல்லாசானாய், நடமாடும் கலைக் களஞ்சியமாய், நாள்தோறும் கொழும்பு மாநகரின் தெருக்களாக வீதி ஓரங்களில் மாலை வேளையில் மெல்ல நடந்து செல்லும், தமிழ் தந்த அகத்தியனார் இவர் போலும் எனக் கண்ணுற்றோர் வியக்கத்தரும் புலவர் சிவங்கருணாலய பாண்டியனாரின் தோற்றமே மனக் கண்ணுக்குப் புலனாகும்.

வடமொழிப் பயிற்சியும் தென்மொழிப் புலமையும் சான்ற பாண்டியனார் இனியவர். இலக்கிய இலக்கணத்துறையிற் கேட்டவற்றிற்கெல்லாம்உடனேவிடை அளிக்கவல்லவர் மொழித்திறத்தின் முட்டறுத்து இதற்கு இதுவே பொருள் என ஐயந்திரிபறச் சொல்லும் ஆற்றல்படைத்தவர். தமிழின் தொன்மையை உயிரெனப் போற்றுபவர்.

எழுபது வயதை எட்டிப் பிடிக்கும் இப்புலவர் பெருமகனார் தாய் நாட்டினிற் பிறந்து. சேய் நாடான ஈழத்தில், இந்நாடு செய்த தவத்தின் பயனாக, ஏறத்தாழ அரை நூற்றாண்டாக வாழ்ந்து வருகின்றார். இவரிடம் பாடங்கேட்டுப் பயனடைந்தோர் பலர் தமது முதுமையிலும் தமிழ் சொல்லிக் கொடுக்க நடந்து திரியும் புலவர் அவர்களின் நிலையைக் கண்டு மனம் பொறுக்க முடியாது, தமிழ் அன்பர்கள் அவரைப் பாராட்டுமுகமாக இவ்வாண்டு மே மாதம் 31-ம் நாள் திங்கட்கிழமை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்திற் பெருவிழா எடுத்துப் பொன்னாடை போர்த்துப் பொற்கிழி அளித்தமை சாலவும் பொருத்தமுடைத்து.

புலவர் அவர்களின் கூர்த்த மதியையும், வடமொழிச் சொற்களுக்குத் தகுந்த நேர்த் தமிழ்ச் சொற்களைச் சொல்லவல்ல ஆற்றலையும், இன்னோரன்ன பிறதிறன்களையும் அறிந்துள்ள மாணவர் அத்தனைபேரும் அவருக்கு விழா எடுத்தமையை அறியும்போது, பேருவகை கொள்வர் என்பதிற் சிறிதேனும் ஐயமின்று.

மாலை 5 மணியளவில் வழக்கறிஞர் திரு. சி. அரங்கநாதன் கியூ. சி. தலைமையில் விழா ஆரம்பமானது. புலவரது சொல் நுணுக்கங்களை நன்கறிந்த பெரியோர்கள் பேச்சாளர்களாக அமைந்தது அவ்விழாவிற்கு மெருகூட்டியது.

'நன் பாட்டுப் புலவனாய்ச்
சங்கமேறி
நற்கனகக் கிழி தருமிக்கு
அருளினோன்காண்'

என்பதனை உள்ளடக்கிய தமிழ்த் திருமுறையைத் திரு. தி. மாணிக்கவாசகர் முதற்கண் ஓதியதும், தலைவர் அவர்கள் தமது முன்னுரையை வழங்கினார். புலவர் அவர்கள் ஆற்றிய தொண்டினுக்காக நாம் அனைவரும் அவர்க்கு எமது அன்பையும். ஆதரவையும், வணக்கத்தையும் தரவேண்டும் என்றார். தலைவர் புலவர் அவர்கள் இயற்றிய திருக்குறள் அறத்துப்பால் உரையைப் பதிப்பித்தல் வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்து புலவர் அவர்களின் தமிழ்த்தொண்டு சைவசித்தாந்தத் தொண்டு என்பனவற்றைப் போற்றிப் பாராட்டிதழ் வழங்கப்பட்டது.

பின்னர் கேணல் இரா. சபாநாயகம் புலவர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கினார்.

திரு. இ. இரத்தினம் நிகழ்த்திய சொற்பொழிவில் தமிழின் இயல்பான கருத்துக்களை மக்களின் மனதில் தேக்கி, அவர்களின் சிந்தனை வளத்தை வளர்க்கின்ற பாண்டியனாரின் தமிழ்த் தொண்டே உண்மையான தமிழ்த்தொண்டு என்றார்.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்னும் வாக்கிற்கு நவாலியூர் சோ. நடராசன் தாம் பாடிய வாழ்த்துக் கவிதையைப் படித்து நன்று செய்த நம்பியைப் பாராட்டினார்.

திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் ஆற்றிய தமது உருக்கமான உரையில் பாண்டியனாரின் தமிழ்த் தொண்டினை எதிர்காலச் சந்ததியினரும் பயன்படுத்தும்வகையில் அவர் எழுதிய நூல்களை வெளியிடுதல் இன்றியமையாத செயலாகும் எனக் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து புலவர் அவர்களின் நூல்களிலிருந்து தெரிந்தெடுத்த சில பாடல்களைத் திருமதி. செ. ஸ்ரீஸ்கந்தராசா மிக இனிமையாகப் பாடிச் சபையினரை மகிழ்வித்தார்.

அடுத்துப்பேசிய திரு. செ. வேலாயுதபிள்ளை புலவர் பாண்டியனாரின் கவிதைகள் சங்கச் செய்யுட்கள் போன்றவையென்றும் அவரது தமிழ், தூய தமிழென்றும் பாராட்டினார். இப்புலவர் பெருந்தகையை என்றோ பாராட்டியிருத்தல் வேண்டும்; எனினும் இன்றே அது கைகூடிற்று என்றார் அவர்.

செல்வி. நா. காசிப்பிள்ளை உரையாற்றுகையில், புலவர் அவர்கள் யாத்த நூல்களில் நுண்மையும், இனிமையும், எளிமையுமானது 'அழகியது' எனவும் புலவரின் முதுமையிற் புலவரை ஆதரிக்கவேண்டியது நமது கடன் எனவும் சொன்னார்.

புலவர் பாண்டியனார் பாராட்டிற்குப் பதிலளித்துப் பேசுகையில்,

'இந்த விழா எனக்கு என்றுமில்லாத மகிழ்வையும், பெருமையையும் தந்தது. இது மிகத் தூய்மையானது. உங்கள் அன்பு மறக்கற்பாலதன்று. உங்கள் பயனருதாத் தூய அன்பினை நான் பாராட்டுகின்றேன். உங்கட்குத் திருவருள் பாலிப்பதாக' என்றார்.

திரு. ஆ. குணநாயகம் நன்றிதெரிவித்துப்பேசினார்.

— சோ. பரமசாமி —

# பாரிஸில் ஒரு "கடும்" சைவ ஹோட்டல்!

சைவ உணவுக்காரர் வெளிநாட்டுக்குப் போனால், முட்டையையும் சைவ உணவாகப் பாவித்தால்தான், எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம்! அப்படியானால் உலகத்திலேயே நாகரீகத்தின் உச்சாணியிலே நிற்கும் பாரிஸைக் கேட்க வேண்டுமா?

அதுதான் இல்லையே! சைவ உணவுக்காரராக இருந்தால், உங்களுக்கு இந்தக்கவலை வேண்டாம்!

முட்டையையும், பாலையும் அசைவ உணவாகக் கருதும்கடுமையானசைவ ஹோட்டல் ஒன்று பாரிஸில் இருக்கிறதென்று சொன்னால், நீங்கள் மூக்கின் மீது கை வைத்துவிடுவீர்கள்.

இந்திரலோகம் எனக் காட்சியளிக்கும் 'இன்ப போகப்' பாரிஸில் 'எல் இன்கா' என்ற சைவ ஹோட்டலைநடத்துபவர்! ஒரு சைவரல்ல; 'பாரிஸ்' என்ற பெயர் கொண்ட ஒரு இத்தாலியர்!

முட்டையும், பாலும், வெண்ணெயும், நெய்யும் இந்த ஹோட்டலில் கிடைக்கவே கிடையாது! அதுதானே முன்னரே சொல்லிவிட்டோமே. இது ஒரு கடுமையான சைவ ஹோட்டல் என்று!

'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். அதை வாழ்க்கையில் காட்டவேண்டும்' என்ற மதத்தைச் சேர்ந்தவரே இந்த ஹோட்டல் முதலாளி. நமது சைவமதமும் இதைத்தானே கூறுகிறது!

— "எஸ்"

## வாய் வீரர்கள்

விருந்து வைபவங்களின்போது தமாஷாகப் பிரசங்கம் செய்வது ஆங்கிலேயர் வழக்கம். ஒரு சமயம் ஒரு விருந்தின்போது பிரதம விருந்தினரை அறிமுகம் செய்துவைத்த பேச்சாளர், 'இவர் ஓர் அபூர்வமான பேர்வழி. அவருடைய வாய்க்குள் சாப்பாட்டைப்போட வேண்டியதுதான் தாமதம். உடனே ஒரு பிரசங்கம் வெளியே வரும்' என்று சொன்னார். பிரதம விருந்தினர் தமது பேச்சை ஆரம்பிக்கும்போது சொன்னார்: 'என்னை அறிமுகம் செய்துவைத்தவரும் ஓர் அபூர்வமான பேர்வழிதான். ஏனென்றால், அவருடைய வாய்க்குள் ஒரு பிரசங்கத்தைப் போட வேண்டியதுதான் தாமதம் உங்கள் சாப்பாடு வெளியே வந்துவிடும்.'

தயாரிப்பு — வழிப்போக்கன்.

# வேலையில்லாப் பிரச்னைக்கு அபிவிருத்தி தீர்வுகாணுமா?

டேவிட். ஏ. மோஸ்

இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வேலையில்லாப்பிரச்னை தீர்வு காணவியலாத ஒரு பிரச்னையாகவுள்ளது. இந்நாடுகளின் அரசாங்கங்கள் முதலாளிமார்கள், தொழிலாளர்கள் வளர்ந்துவரும் இப்பிரச்னையில் கூடிய கவனம் செலுத்திவருகிறார்கள். பள்ளிப்படிப்புமுடிந்ததும்வேலையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த இளைஞர்கள் வேலையின்றி ஏமாற்றத்தோடு வீதிகளில் அலைவது அரசாங்கத்துக்குக் கவலையளித்துள்ளது. அரசாங்கத்துக்கு மட்டுமன்றி தொழிற்சங்கங்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் இப்பிரச்னை பெரும் கவலையை அளித்துள்ளது. இவர்களுக்குமட்டுமன்றி வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் ஏமாற்றத்தாலும் வறுமையாலும் கவலை அதிகரித்துள்ளது

### வேலையில்லாப் பிரச்னை

சமீப காலம்வரை பொருளாதார நிபுணர்கள் அபிவிருத்தி குன்றிய நாடுகளில் வேலையில்லாப் பிரச்னையிருப்பதற்குக்காரணம் அபிவிருத்தியில்லைமையே. ஆதலால் அபிவிருத்தியடைய ஆரம்பித்ததும் இப்பிரச்னை மறைந்துவிடும் எனக் கருதினார்கள். இது உண்மையெனில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். வேலையில்லாப்பிரச்னையும்தானாகவே தீர்ந்துவிடும். ஆனால் அனுபவத்திலிருந்து இது சாத்தியமாகாது என்பதை நாம் அறிந்துள்ளோம். இக்கருத்துக்கு முரணாக, விரைவாகப் பொருளாதார அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இன்று வேலையில்லாப்பிரச்னை அதிகரித்துக் கொண்டேவருகிறது. தற்போதையசூழ்நிலையில் வருங்காலத்தில் மேலும் இப்பிரச்னை இந்நாடுகள் பலவற்றில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கலாம்.

### வெளிநாட்டு உதவி

பொருளாதார வளர்ச்சியின் குறிக்கோள் வறியவர்களுக்கு நன்மைபயப்பதேயாகும். ஆனால் பெருந்தொகையானோர் இக்குறிக்கோளையடைவதில்லை. இது சம்பந்தமாக திரு. லெஸ்டர் பியர்சன் தலைமையிலான சர்வதேச அபிவிருத்தி கமிஷன் தனது அறிக்கையில் நல்ல கருத்துக்களை வெளியிட்டுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வெளி நாடுகள் செய்யும் உதவிகள் யாவும் அந்நாடுகளின் சமூக நோக்கங்கள் தேவைகள் ஆகியவற்றைப் படிப்படியாகக் கொண்டே கணிக்கப்படுதல் அவசியம் எனவும் அவ்வாறு கணிக்காது பொருளாதார வளர்ச்சி வேலைவாய்ப்பை உற்பத்திசெய்யுமெனத் தவறுதலாக எண்ண இந்நாடுகள் சொல்படுகின்றன எனவும் கமிஷன் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது

பொருளாதார வளர்ச்சி பூரண வேலைவாய்ப்பை ஒருபொழுதும் அளிக்காது என்பதை உலக வங்கித் தலைவர் திரு. மக்நமாரா ஒத்துக்கொண்டுள்ளார், வெனிசுலாவை இதற்கு உதாரணமாக இவர் சுட்டிக்காட்டியுள்ளார். வெனிசுலாவில் 1050-ம் ஆண்டிலிருந்து 1960-ம் ஆண்டுவரை பொருளாதார வளர்ச்சி சிறந்ததாக அதாவது 8 வீதம் அதிகரித்துக்காணப்பட்டது. ஆனால் இவ்வாண்டின் இறுதியில் இந்நாட்டில் வேலையில்லாப்பிரச்னையை நோக்கியவிடத்து அது முன்னரிலும் பார்க்க அதிகரித்துள்ளது. ஆகவேதான் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்திக்கு உதவியளிக்குமிடத்து அந்நாடுகளின் சமூக, பொருளாதார அமைப்புகளுக்கு ஏற்றமுறையில் புதிய முறையை அனுசரித்து உதவியளிக்கவேண்டும். வேலைவாய்ப்பளித்தல் மற்றும் சமூக நலன்கள் ஆகிய இரண்டையும் உற்பத்திப் பெருக்கத்தோடு சமமாக மதித்து முக்கியத்துவம்அளித்து ஏற்றுக்கொள்ளப்படுமானால் அபிவிருத்தி நாட்டின் ஒழுங்கை நிலைநாட்டவும், நாட்டை ஸ்திரப்படுத்தவும் வலிமை மிக்கதொரு சாதனமாக அமையும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வேலைவாய்ப்பு வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றின் தன்மைபற்றி ஆராய்கையில் உலகில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்ட 1930-ம் ஆண்டுகளில் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் பொருளாதாரத்திலிருந்து வேறுபட்டது என்பதை சுட்டிக்காட்டவேண்டும். இருபிரிவினதும் பொருளாதாரத்துக்கு பெரும் வேறுபாடு உண்டு.

இந்த வேலையில்லாப்பிரச்னையில் இருந்து விடுவித்துக்கொள்ள அபிவிருத்தியடைந்துவரும்நாடுகள் என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்? இந்த எல்லா நாடுகளுக்கும் பொதுவாக சில அம்சங்கள் இருந்த போதும் இக்கேள்விக்கான பதில் எல்லாநாடுகளிலிருந்தும் ஒரே மாதிரியானதாக இருக்கமாட்டாது. விரிவான ஆய்வின்றியே இந்த அம்சங்களில் சிலவற்றை ஒருவர் கூறிவிடலாம்.

அநேகமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிலம் பற்றாக்குறையால் அல்லது நிலத்தை நல்லமுறையில் பயன்படுத்தாமையால் அடிக்கடி வேலையில்லாப் பிரச்னை தலைதூக்குகிறது,

### வேலைவாய்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கைகள்

நகர்ப்புறங்களில் வேறுவிதமான வேலையில்லாப்பிரச்னை உள்ளது. இங்கு நகரங்களுக்கு வேலைதேடிச்சென்று அங்கு அது கிடைக்காது இருப்பவர்கள் வேலையற்றிருப்பவர்களில் ஒரு பிரிவினராவர். பாடசாலையில் ஆரம்பக்கல்வியை மட்டும் கற்றுவிட்டுப் பின்னர் தொழில் வாய்ப்புத்தேடியிருப்பவர்கள் வேலையற்றோரில் மற்றொரு பிரிவினர். சிரேஷ்ட பாடசாலைக்கல்வியையும் பல்கலைக்கழகப்பட்டப்படிப்பையும் முடித்துவிட்டு வேலையின்றியிருப்பவர்கள் 3-வது பிரிவினர்,

இவ்வேலையில்லாப்பிரச்னையின் பல காரணிகளையும் சேகரித்தபின்னர் அரசாங்கம் அக்காரணிகளுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்க வேண்டும். நிலமின்மையால் கிராமப்புறங்களில் ஏற்படும் வேலையில்லாப் பிரச்னையைச் சமாளிக்க நிலவிநியோகம், நிலத்தைக் குத்தகைக்கு விடல் ஆகியவற்றில் மாற்றங்கொண்டுவரலாம். முடியுமானால் பயிர் செய்கைக்குப் புதிய நிலங்களைப் பயன்படுத்த முயற்சிக்கலாம். கிராமப்புறங்களில் கைப்பணி வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகள் ஆகியவற்றை விருத்திசெய்து வேலைவாய்ப்பளிக்கலாம்.

கிராமப்புறங்களில் நிலத்தைச் செறிவான முறையில் பயன்படுத்தாமையால் ஏற்படும் வேலையின்மையைப் போக்கச் செறிவான பயிற்செய்கை முறையை அனுசரித்து விவசாயத்தை விஸ்தரிக்க உதவவேண்டும். உரவகைகளைக் கூடுதலாக விநியோகம்செய்தல் நீர்ப்பாசனவசதியளித்தல் அதிகசாகுபடியை அளிக்கத்தக்க விதைகளை வழங்கல் ஆகியவற்றின் மூலம் வேலைவாய்ப்பும்அளிக்கலாம் அதேவேளையில் உற்பத்தியையும்பெருக்கலாம்.

### நகரங்களில் வேலையில்லாப் பிரச்னையைக் குறைக்க

நகரங்களில் பிரத்தியட்சமாகக் காணப்படும் வேலைவாய்ப்பின்மையைப் போக்க சில வெவ்வேறு வழிகளைக் கையாளவேண்டும். வெவ்வேறு வழிமுறைகளை மேற்கொள்ளுகையில் கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள வேலையில்லாப் பிரச்னைகள் ஒன்றுக்கொன்று தங்கியுள்ளது என்பதை மனதிற்கொள்ளவேண்டும். ஜனத்தொகைப் பெருக்கம் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. பெருகிவரும் இந்த ஜனத்தொகையைச் சமாளிக்க நிலங்கள் யாவும் மிகக் குறைந்த அளவில் இருகிற துண்டுகளாகப் பிரிக்கப்படுகின்றன. சிலவேளைகளில் நிலத்தை விட்டு வெளியேற வேண்டியும் ஏற்படுகிறது. இதனால் கிராமத்தில் வேலைவெட்டியின்றிச் சும்மாவிருப்பதைவிட நகரப்புறங்களில் வேலை தேடலாம் என்ற எண்ணம் கிராம மக்களிடையே உருவாக அவர்கள் நகரங்களை நோக்கிப் புறப்படுகிறார்கள். அரசாங்கமும் இதற்குத்தக நகரங்களில் வேலைவாய்ப்பளிப்பதில் வெற்றியடைகிறது. ஆனால் அது கிராமமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. நகரத்தை நாடி வரவர வேலையில்லாப் பிரச்னையும்நகரங்களில் அதிகரிக்கிறது. நகரங்களில் ஏற்படும் ஒவ்வொரு புதிய வேலைக்கும் கிராமப்புறங்களில் இருந்து புதிதாக வந்த அநேகர் போட்டிபோடுகின்றனர். எனவே கிராமப்புறங்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும். கிராமப்பகுதிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் நகரங்களில் வேலையில்லாப் பிரச்னையைப்போக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் போன்றே முக்கியத்துவம் வாய்ந்தவை எனவே நகரங்களில் வேலையில்லாப்பிரச்னையைக் குறைக்க கிராமங்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும்.

தமிழில் — குணம்

பொதுவேலைகள் நகரப்புறங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக வீடமைப்பில் திருத்தங்கள் செய்தல், சுகாதார வேலைகளைக் கவனித்தல் ஆகியன இப்பொது வேலைகளில் சிலவாகும். சமூகநலனைப் பொறுத்தளவில் இவ்வேலைகள் விரும்பப்படுபவை. அதேவேளையில் வேலைவாய்ப்பையும் அளிப்பவை. தகுதியற்ற தொழிலாளர்கள் பெருமளவில் காணப்படின் அவர்களுக்குப் பயிற்சியளித்தல் அவசியமாகும். குறைந்த முதலீட்டில், அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கத்தக்கவகையில் கைத்தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் திட்டங்கள் தீட்டப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

### கண்ணோய்க்கு கற்றாழை

இரவு படுக்கும்முன், கற்றாழை நடுவில் ஒரு துண்டெடுத்து, சுத்தமான பச்சைத் தண்ணீரில் ஐந்து நிமிடம் போட்டு, பின் ஒரு வெண்மைநிறத்துணியில் அந்தக் கற்றாழைத் துண்டை வைத்துக் கட்டி சில நிமிடங்கள் கண்களுக்கு ஒற்றடம் கொடுக்க இந்த நோய் அணுகாது.


NIKONA SALES

நிகோந ஏல நிலயம்

1-ம் மாடி சங்கரப்பிள்ளை கட்டிடம்

166, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.

ஒரு புதிய சந்தர்ப்பம்

யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு ஏல நிலயம்

எமது நோக்கம்

* உங்கள் பாவனைக்குத் தேவைப்படாத நல்ல நிலையிலுள்ள அசைவுப் பொருட்களை எமது காட்சி அறைகளில் பார்வைக்கு வைப்பதன் மூலம் நியாயமான விலைகளுக்கு அவற்றை விற்பனை செய்து உதவுவோம்.

** காட்சி அறையில் விற்பனைக்கு முன்னரே பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியின் அரைப் பகுதிப் பணத்தை உங்கள் அவசியத் தேவையைப் பொறுத்து பெற்றுக் கொள்ள உதவுவோம்.

*** உங்களுக்குத் தேவைப்படும் நல்ல நிலையிலுள்ள இரண்டாந்தரப் பொருட்களை நீங்கள் விரும்பி வாங்கிக் கொள்ளவும் மேலும் புதிதாக அவைகளை வாங்காது விடுவதன் மூலம் அதிக பணத்தை உங்களிடம் மீதப்படுத்தவும் முடியும்.

விற்பனையாளருடன் கலந்தாலோசித்து மிகக் குறைவான விலைகள் பொருட்களின் மீது குறித்து வைக்கப் படுவதால் பொருட்களுக்குரிய நியாயமான விலையைக் கொடுப்பதற்கும், பார்த்தவுடன் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உதவி புரிகிறோம்.

எமது நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசிப் போயாவுக்கு முதல் தினம் [Pre-Poya] பி. ப. 3 மணிக்கு வழமையான ஏல விற்பனை இடம் பெறுவதை எதிர் பாருங்கள் கேள்வியில் வெற்றி பெறுவோர் விலையின் கால் பகுதியை ஸ்தலத்திலேயே செலுத்த வேண்டும். மிகுதிக் கணக்கை முடிப்பதற்கு இரு வார அவகாசம் அளிக்கப்படும்.

தயவு செய்து எமது விற்பனை நிலயத்துக்கு ஒரு முறை விஜயம் செய்து எமது சேவையைப் பெற்று திருப்தி அடையுங்கள்.

எஸ். நரசிங்கம் J. P.

ஏல விற்பனையாளர்.

(16)

புது வாழ்வு நிலையத்து நடவடிக்கைகளைப்போலவே, உணவு வகையறுக்களும் சோமுவுக்குப் புரியாத புதிராய், அவன் கண்டுகேட்டிராதவையாய் இருந்தன.

அதிதிகள் வந்து மேசையைச் சுற்றி அமர்ந்தபோது பெரிய அதிகாரி, அம்மாவையும் வந்து உட்காரும்படி அழைத்தார். அதை எதிர்பார்த்து நின்றவள் போல அம்மாவும் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

உள்ளறையில், அம்மாவின் கைகளுக்குத் தெரியக்கூடியதாய் சமையற்கட்டு மூவரும் நின்றுகொண்டிருந்தார்கள். அம்மா முன்னதாகவே அடுத்தடுத்துக் கொண்டுவர வேண்டிய உணவுப் பதார்த்தங்களை நிரைப்படுத்தி ஒரு நீண்ட மேசையில் வைத்திருந்தாள்.

'நீ இது, அவன் அது, மற்றவன் இது' என்று ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்டி அது அது கொண்டுவரப்படவேண்டிய சந்தர்ப்பத்தையும் விளக்கிக் கூறியிருந்தாள் அவள்.

பேச்சும் புது வாழ்வு நிலையத்திலிருந்து தொடங்கி சந்திர மண்டலத்துக்கு மனிதன் போக மேற்கொள்ளுகிற முயற்சிவரை சுவையாக வளர்ந்துகொண்டே போயிற்று: பேச்சின் சுவையில், உணவுப் பொருள்களின் தித்திப்பில், அம்மா, ஐயா, அதிதிகள் எல்லோரும் தம்மை மறந்து உண்டுகொண்டேயிருந்தார்கள்.

ஜெபரத்தினமும் சுந்தரலிங்கமும் மாறிமாறி கண்ணாடிப் பாத்திரங்களில் நிரம்பியிருந்த உணவுப் பண்டங்களைக் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்தார்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு கரண்டியுமாக அவர்கள் கொண்டுபோய் வருகிறபோதெல்லாம் சோமுவின் உள்ளே ஒவ்வொரு நினைப்பு வந்து அவனுள் ஒரு சிறு பூகம்பமே ஏற்பட்டுத்தணிந்தது.

'புது வாழ்வு நிலையம்' என்ற பெயரே எத்தனை விஷயங்களை மறைத்துக்கொண்டு நிற்கிறது

'அரசாங்கம் இங்குள்ள ஒவ்வொரு சிறுவனுக்கும் உதவிப் பணம் கொடுக்கிறதாமே'

'ஏக்கர் ஏக்கராய் நிலம் வந்துசேருகிறது; இன்னும் வரப்போகிறது!'

'இன்னும் மேட்டு நிலம் ஐந்து ஏக்கர்!'

'உழவு டிருக்டர் ஒன்று பரிசு!'

'எங்களுக்கெல்லாம் உடைகளும் புத்தகங்களும் பரிசு!'

'பாலனும் குமாரும் வந்தவர்களோடு இருந்து சாப்பிடுகிறார்கள்!'

இவர்களுக்குச் சேர்த்துத்தான் உடுப்புகளும் புத்தகங்களும் பரிசாகக்கிடைக்குமோ!'

'செத்தபிறகும் அம்மா எனக்குப் புத்திசொல்லிக்கொண்டு பக்கத்திலே நிற்கிறாள் போலிருக்கிறது அவள் இந்த உலகத்தைப் பற்றிப் புட்டுப்புட்டுச் சொல்லித் தந்ததால்தான் எனக்கு இங்கே நடக்கிற கும்மாளங்களின் உள் கருத்துத்தெரிகிறது!'

'ஊரிலே உலகத்திலே இருக்கிற குழந்தைகளெல்லாமே அனாதைகளாய் இங்கு வந்துசேர்ந்துவிட்டால் இந்த ஐயாவும் அம்மாவும் இவர்களுக்கெல்லாம் இன்னும் பெரிய விருந்தாய் வைப்பார்கள் போலிருக்கே!'

இவர்கள் எல்லாம் சாப்பாட்டுக்கு வழியில்லாமலா இங்கே வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்?'




'ஊரிலே தாய் தகப்பன் உயிரோடிருக்கிற போதே பட்டினியிலே செத்துக்கொண்டிருக்கிற குழந்தைகளைப்பற்றி ஒருயோசினையேயில்லாமல் இங்கே சிரித்து நகைத்த தேவைக்கு மிஞ்சிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிற இவர்களுக்குத் தங்கள் தேவைகளை முடிக்கிறதுக்குச் சமூகத்தொண்டு - தேச சேவை எல்லாம் ஒரு போர்வை.

வயதுக்கு மீறிய அனுபவத்தியோடு வயிறு புகைய சோமு நினைவுகளில் மூழ்கிக் கிடந்தபோது மூன்று மணியளவில் சாப்பிட்டவர்கள் 'குடும்பத்துக்கு இன்றைக்கு கஞ்சி ஊத்தணுமே' என்ற வேகத்தில் வேலைசெய்கிற கூலியாளுக்கு வியர்க்கிறதிலும்பார்க்க அதிகமான வியர்வை சாப்பிட்டுக்களைத்த அவர்களில் அரும்பியிருந்தது. கூலியாள் கைவிரல்களால் வழித்துக் கொட்டுகிற வியர்வையை இவர்கள் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டிருந்தார்கள்.

விருந்தினர்கள் நடு மண்டபத்தில் வந்து அமர்ந்து புகைத்துக்கொண்டிருந்தபோது அவர்களோடு நாலு வார்த்தை பேசிக்கொண்டிருந்த அம்மாவுக்கு இங்கே மூன்று வயிறுகள் புகைந்துகொண்டிருப்பது ஞாபகத்துக்கு வந்திருக்கவேண்டும் அவள் எழுந்து இவர்களிடம் வந்தாள்.

சோமுவுக்கு மனமும் புகைந்துகொண்டிருந்ததை அம்மா காணவில்லை. காணுகிற சக்தி அவளிடமில்லை. அவள்சோமுவின் அம்மாவா?

'ஓ, உங்களுக்குப் பசிக்குமே! நல்ல பிள்ளைகள். நீங்கள் இந்தச் சின்ன மேசையில் கதிரைகளைப் போட்டுக் கொண்டு சாப்பிடுங்கள்''

அம்மாவின் பேச்சிலே தேன் துளித்தது. ஆனாலும் அவளின் அந்த 'ஓ', சோமுவினுள்ளே, மண்டி எண்ணெயாய், மூண்டிருந்த நெருப்பில் விழுந்த புகை மண்டச்செய்தது.

உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, அம்மா மறுபடியும் வந்து பார்த்துச் சிரித்துவிட்டுப் போனாள்.

'என்ன சிரிப்பு!'

சுந்தரலிங்கம் கிடந்த வற்றையெல்லாம் வாரித் தனக்கு மிட்டுக்கொண்டு மற்றவர்களுக்கும் பரிமாறினான். சோமுவுக்கு ஏனோ, அந்த அற்புதமான உணவு வகைகள் எல்லாம் குமட்டிக் கொண்டுவந்தன. இந்தக் குமட்டலில், "இன்றோ நாளையோ நான் இங்கிருந்து போய்விடவேண்டும்" என்று சோமு தனக்குத்தானே பல தடவை சொல்லிக் கொண்டான்.

அன்றிரவு, படுக்கை மண்டபத்தை இருள் கௌவி சிறுவர்கள் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்துவிட்ட பிறகு, வெகுநேரம்வரை சோமு தூக்கமின்றி, இருளை ஊடுருவிய பார்வையோடு படுக்கையிற் கிடந்தான்.

இரவின் மௌனமும், இருளும் அவன் அம்மாவாகி, அவனது இளமைப்பருவத்தையே இருளில் மூழ்கடித்த சம்பவங்களுக்கு அவனை இழுத்துச் சென்று, அவனுள்ளே நின்று ஊளையிட்டன. இந்த அவலத்திலும் அவனிலிருந்து ஏழெட்டுப் படுக்கைதாண்டி அப்பாலிருந்து, யாரோ தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித்தேம்பி அழுகிறது போன்ற ஒலி ஒரு முறை அவனை உலுப்பியது.

ஒலியின் திசையில் பார்வையைத் திருப்பிப் பார்த்தான். இருளுக்குப் பழக்கப்பட்டுவிட்ட கண்களுக்குமே எதுவும் தெரியவில்லை. தேம்பல் மட்டும் நின்று நின்று அவன் காதையும் மனத்தையும் துளைத்துக்கொண்டிருந்தது. இருளை ஊடறுத்து வந்த அந்தத் தேம்பல் ஒலியில் இருள் பயங்கர உருவங்களைக் கொண்டது.

சோமுவின் பார்வை அந்தத் திசையிலேயே ஊன்றிக் கிடந்தது. பகலிலிருந்த வெப்பம் தணிந்து குளிருகிற கட்டத்துக்கு இரவு வந்துவிட்ட பிறகு, அந்தத்திசையிலிருந்த படுக்கை ஒன்றிலிருந்து ஓர் உருவம் எழுகிறது.

சோமு தன் நரம்புகள் முறுகி, உள்ளே பயங்கர நாத ஒலி கிளம்புவதை உணருகிறான்.

எழுந்த உருவம், கைகளால் முகத்தை மூடிக்கொண்டே, சாப்பாட்டு மண்டபத்தை நோக்கிப் போவது இருட்செறிவிலும் சோமுவுக்கு மங்கலாகத் தெரிகிறது.

எங்கிருந்து வந்ததோ தைரியமோ, அந்த உருவத்தைப் பின்தொடர்ந்து போகச் சோமுவைத் தூண்டுகிறது:

சாப்பாட்டு மண்டபத்தின் ஒரு கோடியிலே, படுக்கை மண்டபத்துக்குத் தூரத்தில் உள்ள பக்கத்தில் அந்த உருவம் சுவரோடு சாய்ந்து நின்றுகொண்டு தேம்பித் தேம்பி, உள்ளே அடங்கியிருந்த வெப்பியாரம் எல்லாம் வெடித்துச் சிதறுவதுபோல, அழுது குலுங்கிய அந்தக் காட்சி சோமுவினுள்ளே புகுந்து, இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

அவன் அழுதுகொண்டேயிருக்க இவன் பார்த்துக்கொண்டிருந்தமை நீண்டு வளர்ந்துகொண்டிருந்தது. காரணம் தெரியாமலே அந்தச் சிறுவனின்மேல் இந்தச் சிறுவனுக்கு ஒரு பாசம் ஏற்பட்டு வளர, ஆனந்தனின் உருவத்தை அந்தச் சிறுவனில் கண்டானோ என்னவோ, இரண்டொரு தடவை சோமுவின் கண் கலங்கின.

நீண்டநேர இடைவெளியின் பின்னர், அழுகையை முறித்து அடக்கி முகத்தைத் துடைத்துக்கொண்டு படுக்கை மண்டபத்தை நோக்கி நடந்த அந்தச் சிறுவன் தன் முன்னே, வாசலில் சோமுவைக் கண்டதும் திகைத்து நின்றான். திகைப்பு விசும்பலாகிப் பூதாகாரமாய் வளர ஆரம்பிக்கிற நிலையைக் கண்டு, சோமு திடீரென்று பெரியவனாகி, முன்னிறங்கி அந்தச் சிறுவனை அணைத்துக் கொண்டான்.

இந்த அணைப்பில். சிறுவன் தன்னை இழந்து விடத்துடிக்கிற துடிப்பைச் சோமுவுங் கண்டான்.

"ஏன் அழுகிறாய்?"

தழுதழுத்த மெல்லிய குரலில், சோமுவின் இந்தக் கேள்வி, காற்றோடுகாற்றாய்க் கலந்து பிறந்தது

தேம்பல் வளர்ந்து அவனை உலுப்பியதைத்தவிர, கேள்விக்கு விடை பிறக்கவேயில்லை

பல நிமிஷங் கழிந்தபின், "நீ போய்ப் படுத்துத் தூங்கு-விடிஞ்சபிறகு பேசிக் கொள்ளலாம்" என்று சோமு அவனை உள்ளே அழைத்துச்சென்று அவன் படுக்கையில்விட்டான்.

தன் படுக்கையில் சரிந்த சோமு, பலவிதஎண்ணங்கள் மூட்டைப் பூச்சிகளாகி உறுத்த, புரண்டு புரண்டு கொண்டேயிருந்தான். மற்றவனின் விக்கல் ஒலி இடைக்கிடை கேட்டு மறையும் வரை சோமுவுக்குத் தூக்கமே வரவில்லை. தூங்குமுன் எண்ணங்கள் இசை நடும்பின.

'நாளைக்கு இங்கிருந்து புறப்பட்டுவிட வேண்டும் என்றிருந்தேன். இவனுக்காக இன்னும் இரண்டொரு நாள் இருந்து விடுகிறேன்.'

'இவன் யார்?'

அங்கிருந்த பல முகங்கள் அவன் மனக்கண்களின் முன் ஒவ்வொன்றாக வந்து நின்று மறைந்தன. முதல்நாள்

(10-ம் பக்கம் பார்க்க)

# மலையகத்தின் முதியோர் மத்தியில் வழங்கும் நாட்டுப் பாடல்கள்

— நாவல்நகர் பி. மகாலிங்கம் —

நாவலநகருக்கு நான்கு மைல் தொலைவில் உள்ள தொரு சிற்றூர்தான் ஹப்கஸ்தலாவ. பொல்வதுர என்ற ஒரு சிறு கிராமம் இந்த ஊருக்குப் பக்கத்தே யுள்ளது. பொல்வதுரக் கிராமத்து நீரின் ருசியே தனி, இளநீரின் சுவையை உடையதாக இக்கிராமத்து நீர் இருந்ததாக ஒரு கதை உண்டு. இதுவே சிங்களத்தில் திரிபுற்று பொல்வதுரவாகிவிட்டதாம். (பொல்-தேங்காய்) இங்கு வசிக்கும் குடும்பங்களில் ஏராளமானவர்கள் விவசாயத்தை நம்பி உயிர்வாழும் குடும்பங்களாவர்.

மலைகளும் அழகிய இயற்கைச் சூழலும் இணைந்து கண்ணுக்கு விருந்தாக அமைந்துள்ள இக்கிராமத்தில் விவசாயம் புரிந்து வாழும் இரு குடும்பங்களின் களத்துமேட்டுக் காதலர்கள்தான் பழனியும், பாலாமணியும். இவர்கள் இருவரும் வயல் வெட்டுக்காலங்களில் களத்தில் வேலை செய்வது என்றாலே அளவிறுக்கும் குஷிதான்.

அந்தி சாயும்வேளை — பாலாமணி களத்திலே குஷியாக நடக்கின்றாள். பழனியின் பார்வை அவள் மேல் பதிந்துவிடுகின்றது. அவ்வளவுதான்

'வில்லிக் கயல் இணைஞ்ச
விந்தைக் கருவிழியாள்
கண்ணிலே பட்டவுடன்
கருவிழியும் ஏங்கு
தையோ!'

என்று பாடுகின்றான். பழனியின் பாட்டைத் தொடர்ந்து,

'ஏங்கும் ஏங்கும்,
உன்தன்
ஏலேலோ மனமேங்கும்
பாங்கில் தெரியுதுன்தன்
பண்பு வெளிச்சமாக'

என்ற பாடல் எதிர்ப்புறத்திலிருந்து பிறக்கின்றது, ஏங்கும் அவன் விழிகளை அவளும் விரும்புவதுபோலப் பதிலுறுத்த அவள், பழனியின் பாங்கில் பண்பும் இருப்பதை வெட்டவெளிச்சமாக ஒத்துக்கொண்டும்விடுகின்றாள்.

அவளது நடை தொடருகின்றது அவளது கொண்டையில் அவள் அணிந்திருந்த அனிச்சமலர் அவள் அழகுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. அவள் ஆற்றுப்பக்கமாக நடக்கின்றாள்.

அவளைப் பார்த்தவாறு பழனி பாடுகின்றான்!

'அனிச்சமலர்க்
கொண்டைக்காரி
ஆத்தோரம் போகிறியே
மண்டி மண்டிக் குளிச்சிடு நீ
மையிருட்டு ஆகுமட்டும்!'

அவனது இந்தப் பாடலுக்கு அவள் ஆத்திரம் கலந்த அன்போடு எப்படிப் பதிலளிக்கின்றாள் தெரியுமா?

'ஆசையைப் பாரு,
மச்சான்
ஆறுமுன்னே ஆசைசெயக்
தீண்டினியோ என்மேலே
தீர்த்துக் கட்டிடுவேன்!'

அவளது பதிலில் அவள் அவனை விரும்புவதையும் ஆனால் சாஸ்திர சம்பிரதாயப்படி திருமணம் நடக்கு முன்னே எதுவும் நடந்தால் 'தீர்த்துக் கட்டிடுவதாக' எச்சரித்து கற்பின் மகிமையை அவனுக்கு உணர்த்துவதையும் இப்பாடலில் காண்கிறோம்.

அவன் உள்ளமெல்லாம் பூரிக்கின்றது. இருந்தாலும் தீர்த்துக்கட்டிவிடுவதாகக் கூறிய பாடலின் வரிகள் அவன் மனத்தை உறுத்தத்தான் செய்தன. இருந்தாலும் அவன் மனத்தை வெல்லும்வித்தில் அவன் இப்படியொரு பதிலைச் சொல்லி அவளைப் பூரிக்கவைக்கின்றான்.

'பண்பைப்பற்றி பாடினியே
பாங்கை மறப்பேனு
மேலதான நாளன்று உன்
மேனி என்தன்
சொத்தல்லோ!'

இப்படியாக மனங்கவர் காதலர்கள் பண்பு நெறிதவறாது பாடிய பாடல்களை இப்பகுதியில் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களின் வாய்கள் இன்றும் முணுமுணுக்கத்தான் செய்கின்றன அடேயப்பா அவற்றில்தான் எத்தனை இனிமை.

[கடந்த ... லும் 'ஈழநாடு' வார... வெளிவந்த ஆரா... தைப் பற்றி ... சேர்க்கப்படவேண்டி... தகவல்கள் இங்கு த... கின்றன.]

நாவலப்பிட்டி... க்ஷேத்திரமடம், ... டியா மடம் என்னும் ... பிரிவுகளும்சேர்ந்தே ... வடக்காகும். ... இவ் ஐந்துசமூ... பட்டு இணை... இப்பகுதி ... சிறப்பை ... கும். இந்த ... களிடத்திலும் ... களிலும் ... படுவது குறி... கும்.

இந்துக்கல்லூரி

இப்போது ஆராவி... கல்லூரியென்று ... படும் ஆக்காலசைவ... வித்தியாசாலையும் ஸ்ரீ... வித்தியாசாலையும் 4... டுகளுக்கு முன்னர் ... வது 1923-ம் ஆண்... யாழ்ப்பாணம் ... தியாவிருத்திச் சங்க... ரால், அக்காலத்தில் ... யிலிருந்த சைவப்பெ... களான திரு. சரவண... ஓவசியர். திரு இரா... கம் ஓவசியர், டாக்டர் ... சுந்தரம், நீர்வேலி ... தியாயர் என்று அ... பெறும் கதிரேசஉபா... யர். சேர் வைத்தி... அரைசுவாமி ஆகியவ... உதவியுடன் ஆரம்... பட்டதாகும். இக்க... கிளை நிறுவுவதற்கு ... டிய காணி நிலத்... கொடுத்து உதவியவர் ... வைத்திலிங்கம் துரை... யின் சகோதரியும் ... தாயாரின் சகோதரி... சலஞ்சென்ற ... (சுவாமி) பொன்னம்... அம்மையாராவர்... அம்மையாரை இவ்...

# ஆத்... எவ்...

எக்காலோரிடமும் ... உணர்ச்சி உண்டு. ... வுணர்ச்சி உருக்கு... படும் உலோகம் ... றது. வலிமைமிகு ... கூர்மையான கருவி... தும் நன்றாகப் பயன்... றது. பயன்படுத்தப்... றது அதேபோல ... ஒருவனிடம் மறைந்... யில் இருக்கும் இவ்வு... வெளிக்கொணரப்பட்... தருணத்தில் பாவிக்... பொழுது நாம் ... திறமையுண்... திக்கூர்மையா... றெல்லாம் ...

இவ்வுணர்... கொணருதல் ... சுலபமான கா... இதனாலேயே ... திறமைசாலிகளாவ... ஒவ்வொருவரிடமும் ... சக்தியில் இருக்கு... வுணர்ச்சி அளவிலும் ... மையிலும் வேறுபட்... கும். இவ்வேற்று ... வெவ்வேறு துறைக... தரப்பட்ட தி... களை உருவாக்க... கர்த்தாவாகவுள்ள...

முதற்கண் நாம் ... முள்ள ஆத்ம உண... அறியவேண்டும் ... வேண்டும். எத்த... ஆத்ம உணர்ச்சி ... உள்ளது என்பதை... சக்திற்கப்பால் ... தும் செயலிக்... டும். அப்பொழு...

# அராலி வடக்கின் முன்னேற்றமும் அதற்காக உழைத்த தலைவர்களும்

## எங்கள் கிராமம் அராலி

### வெ. சு. நடராசா

கள் 'சாமியம்மா' என்று செல்லமாக அழைப்பர்.

மேற்கூறிய பெரியார்கள் தம் சொந்த நலன் கருதாது பெருமனதுடன் இக்கலாசாலையை நிறுவியதனுற் போலும் இக்கலாசாலையில் கல்வியை ஆரம்பித்த மாணவ மாணவிகள் யாவரும் நன்னிலையில் இருக்கின்றனர். இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோருமே நல்லாயிருக்கிறார்கள். இக்கல்லூரியில் ஆசிரியர்களும், எம் மதத்தினரும் ஆண்களோடு, பெண்களும் சரிநிகர் சமானமாகக் கல்வி கற்பிக்கப்பெறுவது மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும். இக்கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவரே இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்ட கலாநிதி சதாசிவம் அவர்கள். சில வருடங்களுக்கு முன்னர்தான் இருபாலைக்கந்தையா என்னும் அராலியைச் சேர்ந்த பெரியார் இக்கல்லூரிக்குப் பெரும் பண உதவி செய்து விஞ்ஞானகூடமும் உபகரணங்களும் இடைக்க வழிவகைகள் செய்தார். இருபாலைக்கந்தையா அவர்களைப் பண உதவி செய்யத் தூண்டியவர் திரு. க. சப்பிரமணியமவர்களின் தர்மபத்தினியார் திருமதி நித்திய லட்சுமி சுப்பிரமணியம் என அறியப்படுகிறது.

இக்கல்லூரிக்கு ஒரு பழைய மாணவர் சங்கம் ஏற்பட்டு மேலும் பலஉருப்படியான தொண்டுகளைச் செய்ய முன்வர வேண்டும். இக்கல்லூரி தனது 50-வது ஆண்டு பொன்விழாவைக் கொண்டாட இன்னும் இரண்டே ஆண்டுகள் தான் இருக்கின்றன.

நாகேந்திர மடமென்றும் செட்டியார் மடமென்றும் பெயர்கள் ஏற்படக் காரணங்கள் உண்டு. அக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் என்றகல்விகேள்விகளிற் சிறந்த ஒரு பெரியார் இப்பகுதியில் வாழ்ந்ததாகவும், அவர் வாழ்ந்த இடமும் சுற்றுடலுமே நாகேந்திரமடமென இக்காலத்தில் அழைக்கப் பெறுகின்றதென்றும் கூறுவார்கள். இதே போல செட்டியவம்மிசத்தைச் சேர்ந்தவர்கள் வாழுமிடமே செட்டியார் மடமெனக் கூறப்படுகின்றது.

#### நாகேந்திரமடம்

வெகு காலத்துக்குமுன்னர் ஞானியார் சுவாமிகள் என்று ஒரு பெரியார் அராலிமேற்கில் இருந்தார். இவர் காசியிலிருந்து மூன்று சிவலிங்கங்களை வரவழைத்து இரு சிவலிங்கங்களை அராலியிலும் மற்றைய சிவலிங்கத்தை வண்ணார்பண்ணை சிவன்கோவிலிலும் ஸ்தாபித்தார் என்றும் கூறுவர் பெரியர். ஞானியார் சுவாமிகள் ஒருசிவலிங்கத்தைதஸ்ரீ நாகேந்திரக்குருக்களிடம் கொடுத்து நாகேந்திரக் குருக்கள் ஸ்தாபித்த கோவிலே அராலி வடக்குச் சிவன்கோவிலாகும். இக்கோவிலுக்குத் 'திருவிளக்குச்சன்னிதானம்' என்று மறுபெயருமுண்டு.

நாகேந்திரமடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கோயில் என்றகுறை போலும் இக்கோவிலை இப்போது மடத்துச்சிவன் கோவிலென அராலிமக்கள் அழைக்கின்றனர். நாகேந்திரக்குருக்களுக்கு இவ்வாலயத்தில் பெரும் ஈடுபாடு உண்டு. இங்கே சிவலிங்கம் ஸ்தாபித்தபோது இப்பெரியாருக்கு ஒரு அக்ஷய பாத்திரம் ஞானியார் சுவாமிகளிடத்திலிருந்து கிடைத்ததென்றும், அப்பாத்திரத்தைப் பேணிப்பாதுகாத்து வடுப்படியும் கூறப்பட்டதாகவும், அப்பாத்திரம் ஒளிவீசுமிடமெங்கும் வாழுவோர் சிறப்படைவர் என்று ஆசீர்வதிக்கப்பட்டதென்றும் இவ்வூர்ப்பெரியார்கள் மூலம் அறிந்தேன்.

#### முருகமூர்த்தி கோவில்

அராலி வடக்கில் இரு முருகமூர்த்தி கோவில்களும் அம்மன் கோவில்களுமுண்டு. முருகமூர்த்தி கோவில்களில் ஒன்றுனது சில வருடங்களுக்கு முன்னர் கொழும்புத்துறைஸ்ரீயோகசுவாமிகளின் ஆசியுடனும், இலங்கை அக்கால அரசாங்கசபையின் சபாநாயகராக விளங்கிய சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியவர்களுடைய ஆசியுடனும் தாழ்த்தப்பட்டமக்களுக்குத்திறந்துவிடப்பட்டதாகும். இந்தவைபவத்திற்கு 'ஈழநாடு' ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் அவர்களும் சமூகம் தந்து சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தார்.

#### கிராமசபை முதலியன

அராலிக்கென்றே தனிப்பட்ட ஒருகிராமசபை செயற்பட்டுவருவதாக ஆரம்பத்தில் கூறினேன். இந்தக் கிராமசபையை ஏற்படுத்துவதிலும் அராலிவடக்குசமாதான நீதவானுன திரு. க. சுப்பிரமணியம் அவர்கள் பெரிதும் உழைத்திருக்கின்றார். அராலி தெற்கைச் சேர்ந்த திரு. வி. ரி. மூர்த்தியவர்களும் திரு சுப்பிரமணியமவர்களுடன் ஒத்துழைத்திருக்கின்றார் என்றும் அறிகிறேன். இத்துடன் அராலிமுழுமைக்குமென்றே நலன்புரிச் சங்கமொன்று நிறுவுவதற்கும் திரு. க. சுப்பிரமணியம் ஜே பி அவர்கள் முன்னின்று தொண்டாற்றியிருக்கின்றார்.

அராலி வடக்கில் மூன்று சனசமூகநிலையங்கள் செயற்பட்டுவருகின்றன. இவைகளில் நாகேந்திர மடத்தில் அமைந்திருக்கும் சனசமூகநிலையத்துக்கு ஏற்பட்ட அரைவாசிச்செலவை பிரபல பெரியாரான ஜோர்ஜ் தம்பாபிள்ளையவர்களின் பேர்த்தியார் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

#### என்ஜினியரும் முன்னுள் எம். பி. யும்

இவ்வூர் இத்தனை சிறப்புப் பெறுவதற்குப் பெரிதும் முன்னின்று உழைத்தவர்களில், சில தினங்களுக்கு முன் காலஞ்சென்ற என்ஜினியர் திரு. ஆர். இரத்தின சிங்கம் அவர்களுக்கே பெரும் பங்கு உண்டு. அத்துடன் அவர்களுக்கெல்லாம் உறுதுணையாக அரசாங்க உதவிகளைப் பெறுவதற்கு முன்னை நாள் வட்டுக் கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பெரிதும் பாடுபட்டிருக்கின்றார் என்று இவ்வூர்மக்கள் நன்றியறிதலுடன் சொல்லிப் பெருமைப்படுகின்றார்கள். திரு. அமிர்தலிங்கமவர்கள்வட்டுக்கோட்டைத் தொகுதியின் ஏனைய கிராமங்களிலும் பார்க்க அராலி வடக்கின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் பாடுபட்டிருக்கின்றார் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

# த்ம உணர்வை வாழ்விற்கு வ்வாறு பயன் படுத்தலாம்?

### எஸ். என். கதிர்காமநாதன் பி. எஸ். ஸி.

அறிவு திறமை என்பன சரியான திசையில் அமையும். ஆத்ம உணர்ச்சியின் தன்மையை அறியாமல் செயலில் ஈடுபடுதல் சிலவேளைகளில் வேப்பம் விதையை நாட்டி மலாக்கனி பறிக்க முற்பட்டதையொக்கும். ஆத்ம உணர்ச்சி எத்தனையோ பேரிடம் மாசுபட்டு மழுங்கிய நிலையிலுண்டு. இந்நிலையில் இவ்வுணர்ச்சியை வெளிக்கொணருதல் சற்றுச் சிரமம், ஆனுல் முடியும்;

மாசுபட்டு மங்கிய நிலையில் உள்ள ஆத்ம உணர்ச்சியை மெருகூட்டி வெளிக்கொணர சில யோசனைகள்.

#### தோல்வி துன்பத்தில் இருந்து விடுபட

ஒருகொடிய தொற்று நோயிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள 'பால் கட்டுதல்' மூலம் அந்த நோய்க்குரிய அங்கியை (கிருமி) உடலில் பாய்ச்சி அந்த அங்கியின் உதவியுடன் உடலில் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்திக்கொள்கின்றோம். அதேபோல வாழ்க்கையில் ஏற்படும் தோல்வியையோ, துன்பத்தையோ ஏற்று சகித்துக்கொள்ளப் பழகினுல் உங்கள் இதயம் எதையும் தாங்கும் இதயமாகச் செயல்படும். எனவே தோல்வியைக் கண்டு பயப்படாதீர்கள்.

எவ்விதமான மன உளைவு ஏற்படினும் அதை மற்றையவர்களுக்கு எடுத்துக் கூறுமல், காட்டாமல் இருப்பது புத்திசாலித்தனம். ஏனெனில் இவ்வேளைகளில் அவர்கள் நமது பலவீனத்தை அறிவதற்கு வாய்ப்பு கிட்டிவிடும்; அவர்களும் இப்படியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பார்கள். சிலர் மனதைத் திறந்து வெளியில் கூறுவதினுல் மன உளைவு குறைவதாகக் கூறுகின்றுர்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

எந்தவிதமான கஷ்டம் எமக்கு இருந்தாலும் மற்றையோருடன் சேர்ந்து அவர்களின் சந்தோஷத்தில் பங்குபற்றிக்கொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும்.

#### கடமை உணர்ச்சி

ஒவ்வொருவருக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் பலவுண்டு. உங்கள் கடமைகளை நன்ருக மனதில் இருத்திக்கொள்ளுங்கள். அத்துடன் அவைபற்றி நல்ல அறிவைத் தேடிவைத்திருக்கவேண்டும்.

கடமைகள் செயல்படும் பொழுது அவைகளின் பாதையில் சிரமம் ஏற்படக்கூடும் என்ற பயத்தினுல் கடமையினின்றும் விலகுதல் ஏற்கக்கூடியதொன்றல்ல. சில சந்தர்ப்பங்களில் கடமைசெயல் படுகையில் யாதேனுமொருதவறு ஏற்படுவதுண்டு. தவறு விடுதல் மனித இயல்புகளில் ஒன்று. இதை உணராது யாராவது அப்பாவிமீது அல்லது சந்தர்ப்பத்தின் மீது தவறுசுமத்துதல் சமத்த முற்படல் தவிர்க்கப்படவேண்டும். இயன்றளவு நாம் விட்டதவறுகளை ஏற்று உணர்ந்து அதற்கான மூலகாரணத்தைக் கண்டு மென்மேலும் அதே அல்லது அதே போன்ற தவறு ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும்.

சந்தர்ப்பங்களில் ஏதாவது சாட்டுப்போக்குச் சொல்லி மற்றையவர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்திவிட்டு நழுவுதல் நன்றன்று.

இது மற்றவர்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கவும் உங்களை வெறுக்கவும் செய்துவிடுகின்றது.

#### தன்நம்பிக்கைக்கு உரம் இடல் வேண்டும்

தன்நம்பிக்கை திடீரென நினைத்ததும் ஏற்படுத்தக்கூடியதொன்றல்ல இது உங்கள் செயல் மூலம் படிப்படியாக கட்டி எழுப்பப்பட வேண்டியதொன்ருகும். உங்கள் நினைவுகள் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெற்றிகளை எண்ணிப் பெருமிதம் அடையவேண்டும். தோல்விகள் நல்வழி காட்டும் அனுபவங்களே தவிர உங்களை உறுதிதளர்த்தும் என்று ஏற்பட்டவையல்ல எனவே அடியோடுஅவற்றை மறந்து சிந்தனைகளைச்சிறந்த பாதையிலிட்டுச் செல்லுங்கள். சந்தர்ப்பங்களில்சிலர் அறிந்தோ அறியாமலோ உங்களை அதைரியப்படுத்த முற்படுவர். இவ்வேளைகளில் நீங்கள் நிதானமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

மனதில் தன்நம்பிக்கை ஏற்படும்பொழுது உங்கள் தோற்றம் நடை உடைபாவனை மாறுவதை நீங்களே உணர்வீர்கள் மற்றோரும் அதை எடுத்துச் சொல்வார்கள். தன்நம்பிக்கையுள்ளவனிடம் பிரதிபலிப்பை தலைநிமிர்ந்த சுறுசுறுப்புடன் கூடிய ஓரளவு வேகமான நடை, அசைவு, சதா புன்னகை பொலிந்தமுகம், கருத்துச்செறிவுள்ள கவர்ச்சியான பேச்சு, கூர்மையான நேர்த்தியான பார்வை, தனக்கெனச் சொந்தப்பாணியில் அமைந்த ஆடை, அதை அணியும்விதம், எடுத்த காரியத்திலெல்லாம்முன்நிற்கும் வேகம் ஆதியன.

#### சிந்தனைகள் நல்லவைகளாக அமைதல்வேண்டும்

'சிந்தனை நன்ருனுல் செயலும் நன்ருகும்'

எனவே நல்லவற்றையே சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் அவசியமான. சிந்தனைக்குத் தேவையற்றவற்றைச் சிந்தனைக்குக் கொணர்தல், சிந்திக்கவேண்டிய நல்லனவற்றைச் சந்தர்ப்பமற்றனவாக்குகின்றன. ஒரு சிந்தனையாளர் கூறுகின்றார். அதேபோல் நீங்களும் நடப்பவையாவும் நன்மைக்கே, நன்மையே என்று நினைத்து நற்சிந்தனையில் ஈடுபடுங்கள்.

நீங்கள் மற்றையவர்களுடன் சம்பாஷிக்கும்பொழுது கருத்துச் செறிந்த சுருக்கமான சந்தர்ப்பத்திற்கு ஏற்றவற்றைப் பரிமாறுதல் விரும்பற்பாலது. அன்றி மற்றவரின் பொறுமையைச் சோதிப்பதுபோல் வாய்க்கு வந்தபடி அலம்புதல் தவிர்க்கப்படவேண்டும். உங்கள் பேச்சிலிருந்து, அதன் நடையிலிருந்து ஒருவர் உங்கள் மனோபாவத்தை அறிந்துவிடுதல் சுலபம்.

நீங்கள் கூறும் சொற்கள் ஒவ்வொன்றும் நிச்சயமான உறுதியான சொற்களாக இருக்கட்டும்.

ஒரு பாத்திரத்திலே அரைப்பகுதிவரை பால் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இதை ஒருவர் கூறுகின்றார்: 'பாத்திரத்தின் அரைப்பகுதி நிறைந்துவிட்டது' என்று. மற்றவர் கூறுகின்றார், 'பாத்திரத்தின் அரைப்பகுதி நிறையவில்லை' என்று. இதில் முன்னவர் உற்சாக மனப்பான்மை உள்ளவர் (Optimist) பின்னவர் அசிரவு மனப்பான்மையுள்ளவர் (Pessimist) என அறியப்பட்டது. எனவே ஒரே உண்மையை இவர்கள் வெவ்வேறு விதத்தில்

[10-ம் பக்கம் பார்க்க]

# "சோம்பல் மிகக் கெடுதி பாப்பா"

—லித்தி. ஸ்ரீகையரு, களுத்துறை—

பாடசாலைப் பரீட்சையில் கமலாவுக்கும், மாலாவுக்கும் குறைந்த புள்ளிகள் கிடைத்ததனால் வகுப்பு ஆசிரியர் வந்து 'மாலா, கமலா நீங்கள் இருவரும் பாடங்களில் முன்னேறவேண்டும்' என்று எச்சரித்துவிட்டுச் சென்றார். நோன்மதி தினமானபோதிலும் விளையாடப்போகாமல் இருவரும் வீட்டில் தங்கிப் பாடங்களைப் படிக்கவேண்டியிருந்தது. அவர்கள் படிக்கும்போது ஒரு குருவி யன்னலருகே பறந்து வந்தது. அதைக்கண்ட கமலா 'நாம் குருவிகளாக இருந்தால் படிக்கத் தேவையில்லை. எவ்வளவு நல்லது' என்று சொன்னாள். உடனே மாலாவும் "ஆமாம்பறவைகளுக்கு பாடப்பிரச்சினையில்லை' என்று சொன்னாள்.

உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது இருவரும் குருவிகளானார்கள், 'கமலா கமலா இனிமேல் எமக்குப்படிப்பின் கவலையேயில்லை' என்று மாலாவும் சொல்லிக்கொண்டு இருவரும் ஆனந்தமாகப் பறந்தனர் சிறிதுநேரத்துக்குப்பின் பறந்து திரிந்த களைப்பினால் இருவரும் கீழே இறங்கினர். கீழே இறங்கியதும் ஒரு பூனை இவர்களைப்பிடிக்கத் துரத்தி வந்தது பின் குருவியின் உருவில் இருந்த கமலாவும் மாலாவும் உயரப் பறந்து உயிரை காப்பாற்றிக் கொண்டனர்

இந்த ஆபத்திலிருந்து தப்பியபின்பு அடுத்த வீட்டுப் பையன் இவர்கள் இருவருக்கும் கல்லால் அடித்துவீழ்த்த குறி வைத்துக்கொண்டிருந்தான். ஒரே பாய்ச்சலில் பறந்து ஒரு மரக்கிளையை அடைந்தனர் இருவரும். 'எமக்கு இதிலும் நிம்மதி லில்லையே இனி என்னசெய்வது?' என இருவரும் சிந்தித்தார்கள்.

பிறகு இருவரும் "நாம் வண்ணாத்திப் பூச்சியாக மாறினால் நல்லது' எனநினைத்தார்கள். கமலாவும் மாலாவும் நினைத்த மாத்திரமே இருவரும் வண்ணாத்திப் பூச்சிகளாக மாறினார்கள்.

இதுவும் சங்கடமாகஇருந்தது ஏனென்றால் கீழே வண்ணாத்திப் பூச்சி பிடிக்கும் பையன்களின் அபாயமும் மேலே பறவைகளின் அபாயமும் அச்சுறுத்தின. பிறகு இருவருமே சிந்தித்தனர். "படிப்பதற்குச்சோம்பற்பட்டு எப்படியெல்லாம் வரநினைத்தோம் என்ன புத்தியீனம்! நாங்கள் மீண்டும் மாணவிகளானால்தான் நல்லது' என்று நினைத்தனர். உடனே இருவரும் முதலில் இருந்ததுபோல் மாணவிகளாகினர். 'நாங்கள் படிக்க ஆசைப்படுகிறோம். நாம் படித்து எப்படி முன்னேறுவது என்று எமக்குத்தெரியும்' என்று கூறிய கமலாவும் மாலாவும் அன்றுமுதல் சிறந்த மாணவிகளாகத் திகழ்ந்தனர்.

## தெரிந்து கொள்ளுங்கள்!

1 ஆகாய விமானத்தின் உடல் பகுதி அலுமினியத்தினாலேயே செய்யப்படுகின்றது. ஏனெனில் அது பாரம் குறைந்த உலோகமாகும்.

2 குளிர்ப்பதனப் பெட்டிகளில் அம்மோனியா என்னும் வாயு பாவிக்கப்படுகின்றது. குளிர்ப் பெட்டிகளின் இயக்கத்துக்கு இவ்வாயு ஒரு முக்கிய பொருளாகும்.

3 மாகறீன் என்னும் தாவர வெண்ணெய் செய்வதற்கு ஐதரசன் என்னும் வாயு இரசாயன முறையில் பாவிக்கப்படுகின்றது.

4 தென்னமெரிக்காவிலுள்ள அமெசன் நதிக் காடுகளில் "ஆன்ற் ஈற்றர்' என்று கூறப்படும் எறும்பு தின்னும் மிருகங்கள் காணப்படுகின்றன இவற்றின் உடம்பு முழுவதும் மயிர் நிறைந்து காணப்படுவதுடன் வாய் பகுதி நீண்டு சிறு குழல் போல் அமைந்திருக்கும். இவற்றிற்கு நீண்ட நாக்கு உண்டு. இந் நீண்ட நாக்குகளை எறும்புப் புற்றில் விட்டு எறும்புகளை இவை சாப்பிடுகின்றன.

5 தென்னமெரிக்காவும் ஆபிரிக்காவும் பல லட்சம் வருடங்களுக்கு முன் ஒன்றாகவிருந்ததாகவும் நாளடைவில் அவை பிரிந்து வெவ்வேறு கண்டங்களாக மாறியதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

(ஒவ்வொரு மொழிகளிலும் உள்ள எழுத்துக்களின் தொகை)

தமிழில் 247, சீனமொழியில் 214, சமஸ்கிருதம் 48 பாரசீகம் 31, துருக்கி 28, அரபி 28, ஸ்பானிஷ் 27, பிரெஞ்ச் 26, ஜேர்மனி 26, இங்கிலிஷ் 26, கிரேக்கம் 24 லத்தின் 22, இத்தாலி 20.

— ரஞ்சன்

## அன்னையே தெய்வம்

— க. பாலசுப்பிரமணியம் —

ஐயிரு திங்கள் சுமந்து
அறுசுவை வேது மின்றி
மெய்யினில் நோவும் பட்டு
மேதினியில் பெற்றாள் அன்னை

பகலிரவா யுறக்க மின்றி
பாடுபட்டு வளர்த்தாள் அன்னை
அமைதியே அன்பு காட்டி
அறுசுவையும் தந்தாள் அன்னை

நோயினால் அவஸ்தைப் பட்டு
நொந்திட்ட வேளை தன்னில்
மெயினில் நடுக்கம் கொள்ள
மார்போடு அணைத்தாள் அன்னை

வைத்தியர் வீடு சென்று
வணங்கியே மருந்தும் வாங்கி
பத்தியம் காத்த நல்ல
பரிகாரம் செய்தாள் அன்னை

பள்ளியில் படிக்க வைத்து
பண்டித னாக்க வெண்ணி
உளமதில் உவகை கொண்டு
உண்மையா யுழைத்தாள் அன்னை.

புவியினில் வாழும் உயிர்கள்
பற்பல கோடி கட்கும்
அவனியில் அன்பு காட்டும்
அருளுடைத் தெய்வம் அன்னை.

## உங்களுக்குத் தெரியுமா?

1 உலகத்தில்மிகவேகமாக ஓடும் மிருகம் எது?

2 கண்களைச் செவியாகப் பாவிக்கும் பிராணி எது?

3 நீர் தரை இரண்டிலும் வாழும் பிராணி எது?

4 எந்நேரமும் அழுது கொண்டிருக்கும் பிராணி எது?

5 எந்த மிருகத்திற்கு முன்னங்கால்கள் கட்டையாகவும்பின்னங் கால்கள் நெட்டையாகவும்உள்ளது

6 புழுக்களில் எத்தனை வகையுண்டு?

7 யாலா தண்ணீரா அதிகம்பாரமுள்ளது?

விடைகள்:

1 சீட்டா என்னும் சிறுத்தை.
2 பாம்பு.
3 தவளை,
4 தேவாங்கு.
5 கங்காரு.
6 சுமார் 200 வகைகள்:
7 தண்ணீர்,

அனுப்பியவர்:-
யு, ஜீவரட்ணம்
மங்கலப்பிட்டி.




## ஜேர்மனியில் . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரு குடும்பத்தின் அழகும் அக்குடும்பத்தின் பெயரும் புகழும் சேர்ந்து ஒரு இளவரசியேபோ எனப் பொருமைப்படத்தக்க வனப்புடன் திகழ்ந்தாள் இந்திரா. நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் அவள் கரம் பற்றத் துடித்தனர். எனவே இத்திருமணத்தை இரு காதல் உள்ளங்கள் தங்களுக்குள் முடிவு செய்து கொண்ட ஒரு சாதாரண விஷயமாகக் கருதிவிட முடியாது இத்திருமணத்தின் தேசிய இயக்கத்தின் மதிப்பே புள்ளது எனலாம்.

### எதிர்ப்பு

இந்திரா தனது விருப்பத்தைத் தந்தைக்குத் தெரிவித்துவிட்டாள். பிரோஸ் பார்ஸி மதத்தவர். இனத்தால், மதத்தால். வேறுபட்ட ஒருவரை மகள் விரும்பிவிட்டாள் என அவளைக் கண்டிக்கவில்லை. தண்டிக்கவில்லை நேருஜி. ஆனால் வளர்ப்பாலும் மனப்பண்பாலும் வேறுபட்ட ஒருவரை இந்திரா தேர்ந்தெடுத்திருப்பதையிட்டு முதலில் சமாதானம் அடையவில்லை. எனினும் அவளை மறுபடி சிந்தித்துப் பார்க்கும்படி கூறினார். ஆனால் இந்திரா தன் இதயத்தின் முடிவை மாற்ற முடியாது எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டாள். இக்கலப்புத் திருமணத்தையே அவள் விரும்பினாள். நேருஜி முற்போக்குவாதி. மகளின் விருப்பத்துக்கும். தனது கொள்கைகளுக்கும் எதிராக நிற்க விரும்பவில்லை, உடன் சம்மதித்தார். நாட்டின் பல பகுதிகளிலிருந்து கிளம்பிய எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது தனது மகளின் திருமணத்தைத் தானே முன்னின்று மிகஎளிமையாக நடத்திவைத்தார். ஆனால் பல கோணங்களில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பின. இக்கலப்புத்திருமணத்தை உறவினரும் விரும்பவில்லை. வாழ்த்துப் பாக்களுக்குப் பதில் வசைப் பாக்களே திருமணத்தன்று வந்துகுவிந்தன. இவையாவும் ஒன்றுபட்டு இருவர்களைஎன்ன செய்யமுடியும். "நாடே எங்கள் திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தது' எனத் தனது திருமணம் பற்றிப் பின்னர் கூறுகையில் இந்திரா கூறினார்.

இது காதல் திருமணம் மட்டுமல்ல. இருமனங்கள் ஒருங்கிணைந்த சேர்க்கையுமாகும். இருவரும் சிறுபராயம் தொட்டு பழகியவர்களாதலால் ஒத்த கொள்கை ஒத்த எண்ணம் கொண்டிருந்தனர். தேசியஇயக்கத்தில் இருவருமேபங்குகொண்டனர். நேருஜிமேல் இருவருக்குமே அளவுகடந்தபற்று. திருமணம் நடந்த மறுநாள் தந்தையின் ஆசியைப்பெற்று அவர் விருப்போடு காஷ்மீர் சென்றனர் தம்பதிகள். அப்போது வசந்தகாலம். நறுமணம் கமழும் மலர்களும், வண்ணச்சோலைகளும் தேனிலவுக்காக வந்த புதுமணத்தம்பதிகளை வரவேற்றன. (வளரும்)

## நீரில் செல்லும் 'ஸ்கூட்டர்'



இன்று உலகெங்கும் இளைஞர்களை 'ஸ்கூட்டர்' மோகம் பிடித்திருக்கிறது. பாரமற்ற எளிதாக இயங்கக்கூடிய இந்த ஸ்கூட்டர் ரில் வெகுவேகமாகச் செல்லலாம். பள்ளிப் படிப்பு முடிந்து, சர்வகலாசாலையில் காலடி எடுத்து வைக்கும் இளைஞர்கள், இன்று மிகவும் விரும்பி நாடுவதும் இந்த ஸ்கூட்டரைத்தான்!

வீதியில் 'விர்' என்று செல்வது போல், நீரிலும் செல்லக்கூடியது இந்த புதுமையான ஸ்கூட்டர். விசையை அழுத்தி மோட்டாரை இயக்கியவுடன், நீரின் மேல் மோட்டார் படகு செல்வதுபோல் இது செல்லும் மோட்டார் இயக்கத்தை நிறுத்தியதும் சாதாரண படகுபோல் இந்த ஸ்கூட்டர் நீரில் மிதக்கத் தொடங்கும். அதனால் இதில் ஏறுவதும் இறங்குவதும் மிகச் சுலபம்.

'வயதில் நான் முதியவனென்றாலும் இந் நீர் ஸ்கூட்டர் ஓட்டும் ஆசை என்னை விடமாட்டேன் என்கிறதே!' என்ற வெகுஉற்சாகத்துடன் தொப்பியை ஆட்டி நீர் ஸ்கூட்டர் சவாரி செய்கிறார் இவர்!

# ஜெர்மனியில் காதலித்து தாய்நாட்டில் கரம்பிடித்தார்

சாந்திநிகேதனில் இருந்த அன்னையின் நலன்கருதி வெளியேறிய இந்திரா தந்தையுடன் அன்னையின் சிகிச்சைக்காக ஐரோப்பா பயணமானார். அங்கு ஜெர்மனியில் இம்மூவரும் தங்கியிருந்தார்கள்:

இந்த வேளையில் தந்தை நேரு நாட்டின் நலன்கருதி நாடு திரும்பவேண்டிய நிலையேற்பட அவரை தைரியத்தோடு அனுப்பிவைத்தாள் இந்திரா. தந்தையைத் தைரியத்துடன் அனுப்பி வைத்தாள் எனினும் தனிமை அவளை வாட்டியது. அன்னையின் உடல்நிலை அவளுக்குத் துயரளித்தது! இந்நிலையில்தான் இந்திரா தன் பள்ளித்தோழன் பிரோஸ் காந்தியைச் சந்தித்தாள்.

### பிரோஸ் காந்தி இந்திரா சந்திப்பு

— கே. ஜி. —

பிரோஸ் காந்தி சிறு பிராயத்தில் இந்திராவுடன் ஒன்றாகக் கல்வி பயின்றவன். இந்திரா குடும்பத்துடன் நெருங்கிப் பழகி அவர்களது கொள்கைகள் கோட்பாடுகளை அனுசரிப்பான். எனவே இந்திராவுக்கு பிரோஸை மிகவும் பிடித்திருந்தது. பிரோஸ் லண்டனில் பொருளாதாரக் கல்வி பெற்றுக்கொண்டிருந்தான், உதவியின்றித் தனியே அன்னையைக் கவனித்துக்கொண்டிருக்கும் இந்திராவுக்கு உதவும் நோக்கோடு லண்டனிலிருந்து ஜெர்மனிக்கு பிரோஸ் அடிக்கடிவர ஆரம்பித்தான். இந்திராவுக்குப் பிரோஸின் வருகை ஆறுதலளித்தது. தங்கள் குடும்பத்தோடு நெருங்கிப் பழகிய ஒருவர் தூரதேசத்தில் தனக்கு ஆறுதல் அளிப்பதையிட்டு மனமகிழ்ந்தாள். இவ்வுறவு நாளடைவில் காதலாக மலர்ந்தது.

பிரோஸும், இந்திராவும், நேருஜியும் எவ்வளவு கவனமெடுத்தும் கமலாவைக் காப்பாற்ற முடியவில்லை. ஒரு நாள் இம்மூவர் முன்னிலையிலும் அவர்களைத் தவிக்கவிட்டு கண்ணை மூடிவிட்டார் கமலா. அருமைத் தாத்தாவின் மறைவுக்கடுத்ததாக ஏற்பட்ட அன்னையின் மறைவு அவளை மிகவும் வாட்டியது. தன் வாழ்வின் ஒரே பற்றுக்கோடான தந்தையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள் இந்திரா

இத்தாங்கொணாத் துயரையும் தாங்கிக்கொண்டு நாட்டின் நலனே தன்நலனாகக் கொண்ட நேருஜி மகளை



ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் சேர்த்துவிட்டு நாடு திரும்பினார். லண்டன் விடுதியில் அவளுக்கு முன்னர் அறிமுகமான சாந்தா எனும் தோழியும் இடைத்தாள். பலவழிகளிலும் சாந்தா இந்திராவுக்கு ஆறுதல் அளித்தாள்.

### காதலும் கடமையும்

இதற்கிடையில் பிரோஸ்-இந்திரா காதல் வளர்ந்து வந்தது. இந்திரா அடிக்கடி சாந்தாவிடம் பிரோஸைப் பற்றியும் அவனுக்கும் தனக்கும் உள்ள ஒரேவிதமான நோக்கங்கள் லட்சியங்கள் குறித்தும் கூறுவாள். தோழியைப் பிரோஸுக்கு அறிமுகம் செய்துவைத்தாள். இவர்கள் இருவரது காதலும் அவர்கள் கடமையை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. வீண்பொழுதுபோக்கோ, வேடிக்கைகளோ இவர்களை அணுகவேயில்லை. பிரோஸும் - இந்திராவும் சேர்ந்து நாட்டின் விடுதலைப்

### இந்திரா வாழ்வில் — 7

போராட்டங்களைப்பற்றி அலசி ஆராய்வர். அதில் தங்களின் பங்குபற்றித் திட்டங்கள் தீட்டுவர். ஐரோப்பாவில் நடக்கும் போராட்டங்களோடு தமது நாட்டின் போராட்டங்களை ஒப்பிட்டு நோக்குவர். இவ்வாறு வளர்ந்துவந்த அவர்களின் காதல் அவர்களது கடமையைச் செவ்வனே செய்ய உதவியது என்றால் அதன் புனிதத்தன்மையை எவ்வாறு கூறமுடியும்.

1941-ம் ஆண்டு இந்திரா நாடு திரும்பினாள். அவளுடன் பிரோஸும் கூடவே திரும்பினார். நாடு வந்ததும் வீட்டில் இந்திராவின் திருமணப்பேச்சு அடிபட்டது. இந்தியாவிலேயே இந்திராவின் மதிப்பு மிக உயர்ந்த நிலையில் இருந்தது.

(8ம் பக்கம் பார்க்க)

## குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

# பெண்ணிடத்து இந்திரஜாலம்

நம்மைப் பிறப்பிப்பவர் யார்? பத்துத் திங்கள் சுமந்து பெறுபவர் யார்? இத்தனை துன்பத்தினையும் என்னளவும் பொருட்படுத்தாமல், முகங்கோணாமல், முனிவர் பெருமக்களைப்போல் நம்மை நகைமுகங்கொண்டு வரவேற்பவர் யார்? இதனிலும் செயற்கரிய செயல் உலகில் வேறு உண்டோ? ஆனால் இங்குள்ள தகுதியை என்னவென்பது? தமது அன்பினைத் தம் மக்களுக்கும் மணாளனுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்து வாழும் தகுதி வாழ்வினை என்னென்பது?

#### அன்பின் உருவம்

ஒருவனுக்குத் தாய், மற்றொருவனுக்கு மனைவி, பிறிதொருவனுக்கு மருமகள்,

#### மென்மையும் திண்மையும்

இவ்வளவு மெல்லியர்க்கு இவ்வளவு அருமையான பண்புகள் எவ்வாறு வந்து கூடும்? மென்மைக்கு எல்லாம் மெல்லிய பெண்கள் செயற்கரிய செய்வது எப்படி? காக்கைக்குத் தன் குஞ்சே பொன்குஞ்சு என்று வாழ்கிறவர்கள் பொதுஅறமாம் தகுதியில் நிற்பது எங்கே? இங்கேதான் வியப்புத் தோன்றுகிறது, மேலாக மென்மை, உள்ளூரத் திண்மை. இந்தத் திண்மையாலேயே செயற்கருஞ் செயல் செய்ய முடிகின்றது. ஓரமின்றித் தகுதியாக வாழ முடிகின்றது. எந்தத் திண்மை அது? கற்பு என்னும் திண்மை என்கிறார் வள்ளுவர்.

— தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் —

இவ்வாறெல்லாம் அவரவர் கனப்பொருத்தமாகத் தன் அன்பினைப் பலவகையில் மாறிமாறி விருந்தாக ஊட்டுகிறாள். தம் மக்களிடையேயும் அவள் கொண்ட ஒப்புரவு வாழ்வினை யார் வகுத்துரைக்க முடியும்? தன்னையே தன் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடவில்லையா? தாய் தன் உயிரையும் கொடுத்துவிடுகிறாள் சிலபோது. இவ்வாறு பெருமையும் தகுதியும் ஒன்றுசேரப் பெண்ணிடத்தில் விளங்குகின்ற காட்சியைக் கைலைமலை மேலாகக் காண்கின்றார் நம் வள்ளுவப் பெருந்தகை: இல்லை ஒவ்வொரு பெண்ணிடத்தும் இந்த இந்திரசாலத்தினை இந்த மண்ணுலகில்தான் காண்கின்றார். இதனாலேயே 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என மகிழ்ச்சியால் உயரப் பறக்கின்றார்.

கற்பு என்பது கல்வி. என்ன கல்லுவது? மரபினூற் கலைபெற்றமைந்த பண்பாடு இங்கே கொண்டதுவிடாக் கோட்பாடு தோன்றுகிறது. மகனுக்காகப் புலிமேல் சீறும் வீரம் பிறக்கிறது இந்தத்தாய்மை உறுதியில் கற்புறுதியில் நின்றும் அவளை அசைத்துவிட முடியாது. அந்தத் திண்மையே பொது அறத்தினின்றும் அவளை அசையவிடாமல் காக்கிறது. இதுதான் இங்குள்ள நுட்பம். இந்த நுட்பத்தாலன்றோ தகுதி என்ற அறமும் பெருமை என்ற பண்பும் ஒன்றாகப் பெண்ணிடத்தே. எந்தப் பெண்ணிடத்தேயும் ஒத்து விளங்கக் காண்கிறோம். இந்நாளைய பெண்கள் இந்தச் சிறப்புத் தங்களுக்கு இருப்பதனை உணரவேண்டும். இருந்தால் உலகம் வாழும்


## இனிக்கும் தொலைபேசி!

தொலைபேசியை எடுத்ததும் பெண்மையின் இனிமையைத்தான் கேட்கிறோம். பெண்களுக்கும் தொலைபேசிக்கும் அவ்வளவு நெருக்கம்

வலப்பக்கம் இந் நங்கை வைத்திருக்கும் தொலைபேசியில், பேசும் கேட்கும் பகுதிகளும் எண்களைச் சுழற்றும் முகப்பும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன சாதாரண தொலைபேசியின் மூன்றிலொரு அளவினதான இத் தொலைபேசியை இலகுவாக இயக்கலாம் காரியாலயங்களில் பாவிக்க இது மிகவும் உகந்தது தொலைபேசியைக் கையில் வைத்துக் கொண்டே, தேவையான எண்களைச் சுழற்றித் தொடர்பைப் பெற்றுக் கொள்ளலாம்

நாணயத்தைப் போட்டவுடன் இயங்கும் தொலைபேசி தான் கீழ்ப் படத்தில் காணப்படுகிறது. இங்கு தொடர்பைப் பெறுவதற்கு முகப்பில் காணப்படும் விசைகளைச் சுழற்றாமல் அழுத்த வேண்டும். ஹோட்டல் மேஜைகளிலும் விமான நிலையங்களிலும் பெரிய கடைகளிலும் பாவிக்க இது உகந்தது.





## ஆத்ம உணர்வை . . . .

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

மொழிந்தால் இவர்களின் உள்ளக்கிடக்கையை, மனோ நிலையை அறியக்கூடியதாக விருந்தது. இதிலிருந்து ஒருவர் பேசும்விதம் எவ்வளவு முக்கியம் வாய்ந்ததென்று புலப்படும். எச்சந்தர்ப்பத்திலாவது யாருடனும் 'சள்' என்று விழுதல் தவிர்க்கப்படவேண்டும். இயன்றளவு பொறுமையைக் கடைப்பிடித்து சாந்தமாகக் கதைக்கப்பழகிக்கொள்ளவேண்டும். எக்காரியத்தையும் என்னால் இயலாது என்று நினைக்கவோ கூறவோவேண்டாம். இயன்றளவு முயல்வேன் என உறுதிபூணுங்கள்; முயலுங்கள். வெற்றி இன்று தவறினும் என்றோ உங்கள் வசம் வசமாக மாட்டிக்கொள்ளும். இதில் எதுவித ஐயமும் இல்லை.

### உபசாரம்

'மரியாதையைக் கொடுத்து மரியாதையை ஏற்றுக்கொள்' என்பர் அறிவாளர். இதில் எவ்வளவோ தத்துவம் உண்மை, பொதிந்துள்ளது. யாரும் தன்னை மதிக்கத் தவறுவதில்லை அதேபோல் மற்றையவர்களினால் மதிக்கப்பட விரும்புவதில் தவறுமில்லை எனவே நீங்கள் ஒருவரைச் சந்திக்க முற்படும்பொழுதோ, சந்திக்க நேரும்பொழுதோ அல்லது அவருடன் தொடர்புகொள்ளும்பொழுதோ உங்கள் கலாச்சார முறைப்படி அவருக்கு வரவேற்பு, மதிப்புக் கொடுக்கவேண்டும் பிரதியாக நீங்களும் பெற்றுக்கொள்கின்றீர்கள் இது பரஸ்பர சந்தர்ப்ப உறவை ஏற்படுத்தி மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது

சந்திப்பினின்றோ தொடர்பினின்றோ விலகும்பொழுதும் அச்சந்தர்ப்பத்திற்கு உரித்தான மதிப்பைப் பரிமாறிக்கொள்ளவேண்டும் இதில் நன்றி நவிலல் வணக்கம் செலுத்துதல்போன்றவை அடங்கும்

### குறைகூற முற்படின்...

ஒருவரை மற்றவருடன் குறைகூறுதல் விரும்பத்தக்கதொன்றல்ல இது சிலவேளைகளில் வாக்குவாதம் உட்பட சிரமமான சூழ்நிலையை உருவாக்கவல்லது குற்றம் குறை கூறினுல்தான் ஒரு காரியம் பூரண நிறைவை நோக்கி நகரும் இது உண்மை ஆனல் சிலவேளைகளில் இது காரியத்தின் வேகத்தைக் குறைக்கவும் கூடும் சிலவற்றை நாம் அந்த இடத்திலேயே விட்டுவிடலாம், கஷ்டநஷ்டத்தை ஏற்படுத்தா எனத் தோன்றின் ஒருவர்மீது குறை இருப்பின் அதை நிவர்த்தி செய்ய நினைப்பது பரவாயில்லை முதற்கண் அவரது மனோநிலையை அறிந்த பின்னர் சாதுவாக இலேசாக எடுத்துக் கூறவேண்டும் அப்பொழுது குறையை ஏற்படுத்தியவர் உணர்ந்திருந்தக்கூடும் இவ்விடயத்தில் தந்திரமாகவும் புத்தி சாதுரியமாகவும் குறையை எடுத்துரைப்பவரை நடந்துகொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்

### ஆர்வமும் நம்பிக்கையும்

நீங்கள் எத்தொழில் செய்யினும் பரவாயில்லை. ஆனல் அதில் ஆர்வமும் நம்பிக்கையும் பூரண ஒத்துழைப்பும் தேவை. முழு மனதுடன் தொழிலில் கவனம் செலுத்தும்பொழுது அதிலிருந்து ஒரு மனத்திருப்தியும் சந்தோஷமும் ஏற்படுவதை நீங்கள் உணர்வீர்கள்.

எடுத்த காரியத்தில் உறுதியான நோக்குடன் கண்ணும் கருத்துமாகவிருந்தால் அதில் வெற்றியும் அதனல் வாழ்க்கையில் முன்னேற்றமும் கிட்டுமென்பதில் ஐயமில்லை

நீங்கள் செய்யும் தொழிலில் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்றல் அதைத் தொடர்வதில் பிரயோசனமில்லை எனவே விருப்பத்திற்கேற்ற வேறு தொழிலைப் பெற ஏற்ற சந்தர்ப்பத்தை நாடவும். உங்களுக்கு விருப்பமற்ற அதே தொழில் வேறு ஒருவருக்கு விருப்பமானதாக அமையலாம்; எனவே எத்தொழிலையும் எக்காரணம்கொண்டு குறைகூற வேண்டாம்.

திடீரென எத்துறையிலும் முன்னேற்றம் அடையலாம் என தீவிர எண்ணம் கொள்ளுதல் கூடாது. முன்னேற்றம் நீங்கள் அத்துறையில் பெறும் அறிவிலும் அனுபவத்திலுமே தங்கியுள்ளது. எனவே அந்தந்தத்துறையில் முன்னேற்றத்தைப் படிப்படியாகப் பெற நோக்கவும்.

நீங்கள் எந்த ஒரு ஸ்தாபனத்தில் வேலைசெய்தாலும் சரி அந்த ஸ்தாபனத்தையோ அதன் அதிகாரியையோ அநாவசியமாகக் குறைகூறவேண்டாம். அந்த ஸ்தாபனம் உங்களுக்கு இடமளித்ததற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றியுள்ளவராக இருங்கள். நன்றியுள்ளவராக விருப்பின் அதைத் தூற்றுதீர்கள்.

### எக்காரியத்தையும் பின்போடாதீர்கள்

ஒரு காரியத்தையும் அநாவசியமாகப் பின்போடாதீர்கள். இது சோர்வு மனப்பான்மைக்கு முன்னிடம் கொடுத்ததாகக் கருதப்படும். மனச்சோர்வுக்கு ஒருக்காலும் இடம்கொடுக்காதீர்கள். இடம் கொடுத்தீர்களாயின் காரியம்கெட்டுவிடும்.

பின்போடப்பட்டகாரியம் செயல்பட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படலாம். எனவே இயன்றளவுடனுக்குடன் நடைமுறைக்குக் கொணருதல் சாலச்சிறந்தது.

மேற்கூறிய வழிகளைப்பின்பற்றி அதன்வழி நடந்து பாருங்கள். உங்களிடம் ஒருவித புத்துணர்ச்சி தோன்றுவதை அறிவீர்கள். அவ்வுணர்ச்சியே யான் கூறிய "ஆத்மஉணர்ச்சி".

வட்டியுடன் இனும் !!
ரூபா 1000/- ஆயிரத்துக்கு
வருடம் 6 சதவீத வட்டி கொடுக்கப்படும்.
இதை ஆறு நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்
ஒவ்வொரு மாதமும்
அதிட்டமுள்ள ஒருவருக்கு
ரூபா 35/- முப்பத்தைந்து
இனுமாகக் கொடுக்கப்படும்
மறு விபரங்களுக்கு:
தம்பி அன் கோ,
வண்ணார்பண்ணை.

# இலக்கிய வழக்கு

இலக்கியமென்றல் என்ன என்பதும், இலக்கியத்தின் விரிவு எவ்வாறுனது என்பதும், இலக்கியம் என்ற பெயர் எவ்வாறுனது என்பதும், சங்ககால வழக்கு எப்படி இருந்தது என்பதும். ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்மொழிநூல் வரலாற்றில், தமிழில் யாக்கப்பட்டவை யாவும் நூல் என்றே அழைக்கப்பட்டன. அவை ஓரினச் செய்யுள்களாலும், பல இனச்செய்யுள்களாலும் உரை இடையிட்ட செய்யுள்களாலும், உரைநடையாலும் யாக்கப்பட்டன.

ஓரினச் செய்யுள்களால் யாக்கப்பட்டவை திருக்குறள், அந்தாதி, கோவை போன்றவை. பல இனச் செய்யுள்களால் யாக்கப்பட்டவை கலம்பகம், இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, இராமாயணம் போன்றவை. உரையிடையிட்ட செய்யுளால் யாக்கப்பட்டது. சிலப்பதிகாரம். உரைநடையால் இயன்றுவருபவை வசன நூல்கள். வாக்கியவடிவமாய் வருவன.

நூல் என்று பொதுவாக வழங்கப்பட்டு வாவனவற்றைச் சிறப்பாக வேறுபிரித்தறியும் போது, தொகைநிலை நூல் என்றும், தொடர்நிலை நூல் என்றும் இரண்டாகப் பிரியும்.

இவற்றுள், தொகைநிலை நூலாவது, சொல்லானும், பொருளானும் ஒன்றனை ஒன்று பின்தொடர்தலின்றி ஒருவரால் பாடப்பட்டனவும், பலரால்பாடப்பட்டனவும் ஆகி, பொருள், இடம் காலம், தொழில், செய்யுள், அளவு ஆகிய இவற்றைக் காரணமாகக் கொண்டு ஒருங்கு ஒரு நூலாகத் தொடுக்கப்படுவது. தொடுக்கப்படுவதாவது ஒரே சமூகம் ஆக்குவது.

உதாரணமாகப் புறப்பொருள் பற்றிப் பல புலவர்கள் பாடிய செய்யுள்களை ஒருங்கே ஒரே நூலாகத் தொடுத்துப் புறநானூறு என்றும், அவ்வாறே அகப்பொருள் பற்றிய பாடல்கள் அகநானூறு என்றும் தொகுக்கப்பட்டன களவழி நாற்பது என்னும் நூல் இடம் பற்றித் தொகுக்கப்பட்டது. களம் என்னும் சொல் பொதுவாக இடத்தைக் குறிப்பினும், சிறப்பாகப் போர்க்களத்தைக் குறிப்பதாகும். போர்க்களத்து நிகழ்ச்சிகளைக் கூறும்போது. பலதிறப்பட்ட பொருள்களை எல்லாம் ஒருங்கே தொகுத்துக் கூறுதலின் தொகைநூலெனப்படும். கார் நாற்பது போன்றவை காலம்பற்றித் தொகுக்கப்பட்டவை. தொழில்பற்றித் தொகுக்கப்பட்டது ஊஞ்சல், யானைத்தொழில் முதலாயின. செய்யுளை எதுவாகக்கொண்டு

வாற்றொடர்ந்து நிற்பது சொற்றொடர்நிலை என்பது கண்டாம்.

தொடர்நிலைச் செய்யுளின் இரண்டாவது வகை, பொருட்டொடர் நிலை பொருள்தொடர் நிலையாவது. பொருளாற்றொடர்ந்து நிற்பது. இங்ஙனம் பொருளாற்றொடர்ந்து நிற்கும் நூல். கதைதழுவி நாடகப்பாணியில் வருவதாகும். இப்பொருட்டொடர் நிலையைச்சார்ந்த நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பயப்பனவும், அவற்றுள் ஒன்றும் பலவும் உணர்த்துவனவும் ஆகும். இவ்விரு வகையில் முதலாவது பிரிவைச்சார்ந்த நூல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி, இராமாயணம், பாரதம், பெரியபுராணம் முதலாயின.

எனவே தமிழ்மொழியில் யாக்கப்படும் நூல்கள் அத்தனையும், தொகைநிலை நூல்கள் எனவும், சொற்றொடர்நிலை நூல்கள் எனவும், பொருட்டொடர்நிலை நூல்கள் எனவும் முத்திறப்படுவனவாகும். இதனல் 'நூல்' என்ற வழக்கே சங்ககால வழக்கு என்பது புலனுகும். தமிழ்மொழியில் யாக்கப்படுவனயாவும் நூல் என்றே வழங்கப்பட்டன.

புலவன்செய்யும் செய்யுட்டொகுப்புநூல் போறலின் 'நூல்' எனப்பட்டது. நூல் போன்றமைந்த நூலின் இயல்பை அறிவாம்; நூலினை நூற்கும் திறமையாளர், தங்கைவன்மையால் கதிரின் உதவிகொண்டு, பஞ்சுத் துய்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒழுங்குபட அழகாக நூலாக்குகின்றனர். அவ்வாறே செய்யுள்செய்ய வல்ல புலவன் ஒருவன் தனது வாய்வன்மையால், தனது மதிநலம் வாய்ப்பப் பரந்துபட்டுக் கிடக்கும் சொற்களையெல்லாம், பொருளார ஒன்றுசேர்த்து ஒரேச

வரணியூர் பண்டிதர்
— ஆ. சின்னத்தம்பி —

தொகுக்கப்பட்ட நூல் கலித்தொகை, திருக்குறள் என்பன. அளவு பற்றித் தொகுக்கப்பட்ட நூல்கள் பதிற்றுப்பத்து, குறுந்தொகை, பன்னிருபடலம் முதலாயின. எனவே தொகைநூல்கள், எவ்வெக் காரணங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டனவோ, அவ்வக்காரணங்களால் பெயர் பெறுவனவாயின. ஆகவே பரந்துபட்டுக்கிடக்கும் தொகை நூல்களை எல்லாம் இனம் அறிந்து தெரிந்து கொள்ளுதல் அறிஞர் கடன்.

இனி. இரண்டாவதுவகையைச் சார்ந்த தொடர்நிலைக்கு வருவாம். தொடர்நிலை ஆவது, சொல்லாயினும், அன்றிப்பொருளாயினும் ஒன்றனை ஒன்று பின்தொடர்ந்து நிற்பது. இத்தொடர்நிலை நூல்கள், சொற்றொடர்நிலை என்றும் பொருட்டொடர் நிலை என்றும் இரண்டாக விரியும்.

அவற்றுள், சொற்றொடர்நிலையாவது ஒரு செய்யுளின் அந்தம். அதனை அடுத்துவரும் செய்யுளின் முதலாக வருமாறு தொடுக்கப்பட்டு நூல்முழுமையும் ஒரே தொடராக மாலைபோன்று வருவது. அவ்வாறுவருவன: அந்தாதி, கலம்பகம், இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, கோவை முதலாயின. எனவே, சொல்

முடிகமைய அழகாகச் செய்யுள் செய்கின்றன். உரைநடையும் அவ்வாறே என்பதனை ஓர்க.

அன்றியும் எற்றுநாளைத, தச்சன் வெட்டும்மரத்தின் கோணலைநீக்கி நெறிப்பட ஒழுங்கு செய்வது போன்று மக்களின் மனக்கோட்டத்தை நீக்கி மனதை நன்னெறியில் உய்க்கும். ஆன்றோர் செய்யுள்களையும் உரை நடைகளையும் நூல் என்றே வழங்கலாயினர்.

நூல் என்பதனை வடமொழியாளர் பிரபந்தம் என்ப; நூல் பனுவல் என்பன தமிழ்வழக்கு. நூல்களுக்குத் தனித்தனி சிறப்பாகப் பெயரிட்டு வழங்குவதுண்டு. அப்பெயர்கள் அவ்வந்நூல்கள் இயலும் திறம் நோக்கிச் சூட்டப்படும், அன்றி ஆக்கியோன் பெயரானும் வழங்குப. அவற்றைப்பற்றிப் பின்னர் விரிப்பாம். இவ்வாறு சங்ககாலம்தொட்டு வழங்கிய நூல் என்னும் பரப்பை இரு பெரும் பிரிவாக வகுத்தனர். அவைதான் இலக்கணம், இலக்கியம் என்பன இவற்றுள் சான்றோர்வழியே முன்தோன்றியது இலக்கியமாகும் இலக்கணம் இலக்கியத்திற் கட்டுக்கோப்பை எடுத்துரைப்பது. இலக்கியத்தின் அமைவு, இலக்கியத்துட் புதைந்து கிடந்த

(11-ம் பக்கம் பார்க்க)

## பிரயாணி

(6ம் பக்கத்தொடர்ச்சி)

அவள் கண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தபோது அவனிடமிருந்து துவாக்கொடியை வாங்கிக்கொண்ட பையனின் முகம் மட்டும் வந்து நின்ற நகர மறந்தது.

'ஓ, அவன்தான் இவன்'

'அவன் பெயர், பெயர்... நடராசா!'

நடராசா என்ற பெயரும் அந்த முகமும் கலந்து ஒன்ருகிச் சோமுவுக்கு அவனை அறிமுகஞ் செய்து வைத்தன.

'நாளைக்கு எல்லாம் தெரிந்துவிடும்' என்றநினைப்போடு சோமு தூங்கினுன்.

(வளரும்)

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்காற்சட்டைக்காரனுடை ... சிரிச்சுச் சிரிச்சுக் கதைக்கிறபோது நான்கவனிச்சிருக்கிறன் ... ம்ட ... எண்டாலும் அவள் பெரிய ஆளாய்த்தான் பாத்துப் பிடிச்சிருக்கிருள்..."

"உனக்கொரு சேதி நான் சொல்லட்டோ மச்சான் ... அவள் போனது எனக்குந் தெரியும் மச்சான் ... அண்டைக்கொருநாள் பொழுதுபடும் நேரமாக அவை இரண்டுபேரையும் நான் கண்டனுன் ... இரண்டு பேருக்கும் நல்ல வெறிமச்சான் ... கடிப்பிடிச்சபடி இருந்தினம் ஒரு காருக்குள் ... கொக்குவில் ஸ்ரேசனுக்கருகிலை..."

"ஓ! அவை அங்கபோய் ரயில் ஏறியிருக்கினம் அப்ப அவை கொழும்புக்குத்தான் போயிருப்பினம். அதுசரிமச்சான் ... அவள் வள்ளிக்கும் வெறி எண்டு நீ சொல்லுறியே நீ என்ன மணந்தா பாத்தனி...?

"நீ என்னடாப்பா ஒரு மாதிரிக் கோவிக்கிருய்...?"

"இல்லை மச்சான் ... அவள் ஒரு நல்லபிள்ளை அறிவுள்ள பிள்ளை நீ அவளை உப்பிடிச் சொல்லக்கூடாது"

"அப்ப ஆசை வெறியாயிருக்கும்...!"

"அட்ட அதுதான் சரி ... இருக்கும் இருக்கும் அந்த வெறிதான்..."

கந்தையன் அத்தனையையும் காது குடுத்துக்கேட்டபடி உள்ளே நிற்கிருன் அவனுக்குத் தெரியும் தன் பிள்ளைக்குவந்தது ஆசைவெறிதான் என்று. அவன் உள்ளம் மகிழ்ந்தது தன்பிள்ளையின் துணிவைஎண்ணி பெருமிதங்கொண்டான், கந்தையன்.

(யாவும் கற்பனை)

றீகல்— யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி .ப. 2-30
M. G. R, சாவித்திரி
P. S. வீரப்பா
நடித்த
மகாதேவி
(புதிய பிரதி)
Daily 6-00 p m
Raquel Welch
in
FLARE UP
(Color)

ராஜா (யாழ்ப்பாணம்) இன்றுமட்டும்
தினசரி 10-30, 2-00, 5-30
வஹிதா ரஹ்மான்
ராஜ்குமார்
நடித்த
நீல்கமால்
(வர்ணம், ஹிந்தி)
இத்துடன் 'பிலிம்பெயர்' பரிசளிப்புவிழா காட்சிகள் கலரில் காண்பிக்கப்படும்.

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
சிவாஜி - பானுமதி
நடித்த
அம்பிகாபதி

# இலக்கிய வழக்கு

[10-ம் பக்கத்தொடர்ச்சி]

இலக்கியத்தை உருப்படுத்துவது. இலக்கியம் இலக்கணம் ஒன்றின்ஒன்று இரண்டும் பிரிந்தியலா. அப்பனும் அம்மையும் போன்றியலும் ஆற்றல் உடையன.

நுண்மாண் நுழைபுலச் சான்றோர் யாத்த இலக்கிய நூல்களெல்லாம் துருவித்துருவி வடித்தெடுத்த விதிமுறைகளே இலக்கணமாகும். எனவே இவ்விலக்கண நூல்களின் ஆதாரத்தோடு இலக்கிய நூல்களின் மரபினை அறிதல்வேண்டும். நம் முன்னோர் செய்த அறிந்தவமே இன்று நம் கண்ணெதிரில் காணப்படும் தொல்காப்பியம். தொல்காப்பியமும் அதன் வழிநூல்களும் இல்லையாயின் நாம் எமது பழமையை எவ்வாற்றானும் சிறந்தமுறையில் சந்தேக விபரீதமின்றி அறிதல் முடியாது.

எனவே தொல்காப்பியம் அதன்வழி நூல்கள் வாயிலாக இலக்கிய வழக்கை ஆராயப்புகுவாம்.

(தொடரும்)

நாகம்ஸ்சினிமா
சுன்னுகம்
தினசரி பி. ப. 2-00, 5-45
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
விடிவெள்ளி

இன்று மட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
ராஜன் - நிர்மலா
நடித்த
சக்கரம்

# ஒட்டு சுட்டான்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யிற்று. ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுபரன் கோவிலின் வருடாந்த உற்சவம் ஆண்டுதோறும் ஆனி மாதம் நடைபெறும்' பதினைநாட்கள் நடைபெறும் இவ்வாலயத்தின் உற்சவங்களில் வேடாவனப்பெருமான் காட்டுமார்க்கமாக வேட்டைக்குச்சென்று திரும்பும் சமயம் அம்மையாரின்கோப உணர்ச்சியை எடுத்துக்காட்டும்வேட்டைத் திருவிழாவே மிகச்சிறப்பு வாய்ந்ததாகும்.

# சிவனாலயத்தில் தவறுவிடுவது ஆபத்து

காரதீவு, நிருபர்

முழுமுதற் கடவுளானசிவபெருமான் நெருப்புக்கு ஒப்பானவர். நெருப்புடன்விளையாடுவது எத்தகைய அபாயமானதோ அதேபோல் சிவன் ஆலயத்தில் தவறு விடுவது ஆபத்தானது. இயமதர்மராஜன் இறைவனின் ஆணைப்படியே உயிர்களைக் கவர்பவன் ஆவான். அங்ஙனம் இருந்தும் மார்க்கண்டேயரை அவன் கவர்கின்றபோது அவனைச் இறைவன் சம்மாரம் செய்ததற்குக் காரணங்கள் மூன்று உண்டு. சிவபூசைக்கு இடையூறுவிளைவித்தமை, ஆலயத்துக்குள் வாகனத்தில் வந்தமை சிவலிங்கத்தையும் இணைத்து பாசக்கயிற்றை வீசியமை என்பவையே அவையாகும் எனவே சைவப்பெருமக்கள் இறைவன் ஆலயத்தில் தவறுகள் இழைக்காது ஆகம விதிப்படி வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 22—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344M & 61 M

காலை 6-00 நாதாஞ்சலி 6-10 சைவநற்சிந்தனை 6-15 இஸ்லாமியநற்சிந்தனை 6-20 பௌத்த நற்சிந்தனை 6-25 துதிப்பாடல்கள் 7-00 மெல்லிசை 7-30 திரைகானம் 7-45 பௌத்த நற்சிந்தனை 8-00 சைவநீதி 8-30 ஞானாமிர்தம்.

344 M & 49 M

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி 10-00 மத்தாப்பு 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர் மலர் 12-00 எமதுதிதி 1-05 பெண்ணுலகம்.

344 M & 61 M

மாலை4-30கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததின வாழ்த்துகள் 5-15 ஞானமஞ்சரி 6-15 துதிப்பாடல்கள் 6-30 கிராமியபாடல்கள் 6-45 கண்ணகி காவியம் 7-00 தாளவாத்திய கச்சேரி 7-30 விவேகச் சக்கரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 நிகழ்ச்சி தொகுப்பு 9-45 பாட்டு 10-30 செய்திச்சுருக்கம்.

ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி.ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
முத்துராமன்—லக்ஷ்மி,
நாகேஷ்—ராஜினி
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை5.30 நடித்த
நவக்கிரகம்

இன்று மட்டும்
வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப, 2-00 மாலை 5-30
ஜெய்சங்கர், பாரதி,
சுந்தரராஜன், நம்பியார், நாகேஷ்
நடித்த
நில்! கவனி!! காதலி!!!

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30மணி
☆ சிவாஜிகணேசன்
☆ ஜெமினி கணேசன்
☆ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காணி

நல்லூருக்கு அண்மையிலுள்ள வைமன் ரோட்டில் வீடு கட்ட வசதியான இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு வி. செல்வத்துரை, 399, நாவலர் ரோட்டு, யாழ்ப்பாணம். 3205

சாவகச்சேரி- சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கு சமீபமாக மின்சாரவசதியுடன் கூடிய பெரியகல்வீடும் 2 1/2 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஐ. சிற்றம்பலம், ஆனந்த நகைமாளிகை சாவகச்சேரி. 3203

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 166, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஆ. ச. சங்கரப்பிள்ளை அன்ட் பிறதர் கட்டிடத்தின் மேல் மாடியில் அறைகள் வாடகைக்குண்டு: தேவைப்படுவோர் மேற்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3204

## தேவை

விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை தொழிலாகக விரும்பும் விவேகமும் எதிர்கால வாழ்வை சிரக்கும் ஆர்வமுள்ள படித்த இளைஞர் விண்ணப்பிக்கவும். லக்குமி தோட்டம், வெள்ளாங்குளம். 3190

மருதமடு யாத்திரிகர்களுக்கு அறிவித்தல்

தற்போதுள்ள நிலைமையில், வழக்கமாய மருதமடுத் திருப்பதியில் ஆடி மாதம் நடைபெறும் திருநாள் பின்போடப்பட்டிருக்கிறது. இத்திருநாள் எப்போது நடைபெறுமென்று பின்னறிவித்தல் கொடுக்கப்படும்.

பரிபாலன சுவாமியார்
2840

THE JAFFNA ACADEMY
CHUNDIKULI.
Phone No. 617

City & Guild's of London Electrical Engineering Practice Classes for the Preliminary, Intermediate and Final Examinations to be held in May 1972. Commence on 25-6-71. Please apply before 24-6-71 in forms available in the office.

2859 DIRECTOR

## தேவை

தனபாடங்கள் பொலிஸிங் செய்ய அனுபவம் உடையவர்களும் தச்சுத்தொழில் கல்லூரியில் பயின்ற அனுபவம் உள்ளவர்களும் தேவை; நேரில் தொடர்பு கொள்ளவும். மொடேன் பேணிச்சர் 79/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், போன்; 7364 3202

நூலுக்கு சாயம் இடுபவர்கள் தேவை. தராதரப் பத்திரங்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ், 176, கே. கே. எஸ். ரோட் யாழ்ப்பாணம். 3201

பிறின்ரிங், ரச்சிங் அனுபவமும் 30 வயதிற்குட்பட்டவரும், கிருஷ்யோவில் வேலை செய்வதற்கு தேவை. விபரங்களுக்கு: மனேச்சர், லக்கி ஸ்டோர், மன்னார். 3189

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்;

சோலைவரி 2-ம் கந்தாயம்- 1971.

1971-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1971-ம் ஆண்டு, ஜூன் மாதம், 29-ம் திகதி, வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன், 10·/. வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகராட்சி மன்ற ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 29—6—1971-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும்பொழுது, வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்.
மாநகராட்சிமன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20—6—71. 2862

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காலமேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

"நீராடுவதால் உடல் தூயதாகிறது. இறைவனைப் பற்றி எண்ணுவதால் உள்ளம் தூயதாகிறது"

— தர்ம சக்கரம்.

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார் சோப் வாங்கி அதிக லாபமடையுங்கள். பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

# மேலும் 25 சிறு கைத்தொழில் நிலையங்கள் திறக்கப்படும்

கோட்டை, திங்கள்

25 சிறு கைத்தொழில் நிலையங்களை நாடு பூராவும் மேலும் அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் அபிவிருத்திசபை இதற்கான யோசனை ஒன்றை அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளது.

வெண்கட்டி உற்பத்தி, வேற்பெண்ணெய் போன்ற சிறுகைத்தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று கைத்தொழில்சபை தனது அறிக்கையில் கூறியுள்ளது.

குருநாகலையில் விவசாயம் சம்பந்தமான கைத்தொழில் பேட்டை ஒன்றையும் ஆரம்பிக்கும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இங்கு இதை ஆரம்பிக்க 15 லட்சம் ரூபா முதலீடு செய்ய வேண்டும்

கைத்தொழில் நிலையங்களை அதிகரிப்பதின்மூலம் நாட்டில் நிலவும் வேலையில்லாப் பிரச்னையை ஓரளவு தீர்க்கலாம் என அமைச்சு கருதுகிறது

## பிரிட்டிஷ் பிரதிநிதிகோஷ்டி விஜயத்திற்கு பாக். அனுமதி

லண்டன், ஜூன் 21

பிரிட்டிஷ் பிரதிநிதி கோஷ்டி கிழக்குப் பாகிஸ்தானுக்கும் மேற்குப் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்வதற்கு பாகிஸ்தான் அரசு இணக்கம் தெரிவித்திருப்பதாக லண்டன் செய்தியொன்று தெரிவித்தது.

இப்பிரதிநிதிகோஷ்டி கிழக்குப்பாகிஸ்தான் நிலைமையை நேரில் பார்வையிடும் இக்கோஷ்டியில் கன்சர்வேட்டிவ் கட்சிப் பிரதிநிதிகள் இருவரும் தொழிற்கட்சிப்பிரதிநிதிகள் இருவரும் அங்கம்வகிக்கின்றனர். இப்பிரதிநிதிகளில் ஒருவர் முன்னைய தொழிற்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராய் இருந்தவர்.

இக்கோஷ்டியினர் விரைவில் தங்கள் விஜயத்தை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கூப்பனுக்கு 2 அவுன்ஸ் மல்லி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ப. நோ. கூட்டுறவுச்சங்கம் இவ்வாரம் தொடக்கம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருக்கும் கூட்டுறவுச்சங்கங்கள்மூலம் கூப்பன் ஒன்றுக்கு 2 அவுன்ஸ் மல்லி கொடுக்கத் தொடங்கியிருப்பதாக யாழ் மேயரும், யாழ் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவருமான திரு அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

### வழக்கம்பரையில் கரபந்தாட்டம்

(நமது நிருபர்)

சுழிபுரம் கிராமசபைப் பகுதியிலுள்ள வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் விளையாட்டு அமைச்சின் உதவியுடன் இம்மாதம் 28-ந் திகதி கரபந்தாட்ட விளையாட்டை ஆரம்பிக்கவிருக்கின்றனர். சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. சந்தசுவாமி விளையாட்டை ஆரம்பித்துவைப்பார். இதைத்தொடர்ந்து காலஞ்சென்ற வைத்தியர் ஏ. கைலாசபிள்ளை நினைவு வெற்றிக் கிண்ணத்துக்கான ஒரு போட்டியும் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் நிலையச் செயலாளர் க. வாமதேவன் கவனித்துவருகின்றார்.

### வயலின் வித்துவான் காலமானார்

சென்னை, ஜூன் 21

பிரபல வயலின் வித்துவான் திரு டி. கே. ஜெயராம ஐயர் இன்று காலமானார் இவருக்கு 79 வயது கர்நாடக இசையில் புதிய உத்திகளைக் கையாண்டவர் இவருக்கு சென்னை மியூசிக் அக்கடமி "சங்கீத கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கியது இவருடைய மறைவு கர்நாடக சங்கீத உலகுக்கு ஒருபெரும் இழப்பாகும்

### பாடசாலைகளில் இடநெருக்கடி இல்லையாம்

(நமது நிருபர்)

அரசாங்க பாடசாலைகளில் இடநெருக்கடி இல்லை என கல்வியமைச்சின் தகவல்பகுதியிலிருந்து வெளிவரும் 'அகுர' எனும் கல்விச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள பலபாடசாலைகளில் மேற்கொண்ட ஆய்வு குறித்து எழுதப்பட்ட ஒரு கட்டுரையிலேயே இடநெருக்கடியின்மைபற்றி விளக்கப்பட்டுள்ளது.

"பாடசாலைகளுக்கு அனுமதி கோரி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக்கொண்டு பாடசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதெனக் கூறவியலாது. ஏனெனில் பெற்றோர் ஒரு பிள்ளைக்கு ஒன்றுக்குமேற்பட்ட பல பாடசாலைகளுக்கு அனுமதிகோரி விண்ணப்பித்துள்ளனர்" என்று இக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயக் கழகத்திற்குப் பாராட்டு

(நமது நிருபர்)

"இளைஞர்கள் எடுத்த எந்தவொரு விஷயத்தையும் திறம்படச் செய்து முடிக்கவேண்டுமென்ற துடிப்பு உள்ளவர்கள். திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகமும் மிகக் குறுகிய காலத்தில் அடைந்துள்ள வளர்ச்சி இதனை எடுத்துக் காட்டுகின்றது" என்று திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழாவில் நல்லூர்க் கிராமசபைத் தலைவர் திரு. பொ. குமாரகுலசிங்கம் பேசுகையில் கூறினார்.

திருநெல்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மேல்மாடியில் கழகத் தலைவி செல்வி அருள்மணிதேவி சின்னத்துரை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. மேலும் அவர் தமது உரையில் இக்கழகம் நாட்டின் உப உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண விடா முயற்சியுடன் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மற்றும் திரு. சூசைதாசன், திரு. எம். ஜெகதாசன், திரு. இ. சுகுமாரன் ஆகியோரும் பேசினர். செல்வி சி. கிரிஜாதேவி கழக கீதம் பாடினார்.

### புராணப்பூர்த்தி விழா

(நமது நிருபர்)

இம்மாதம் 23-ம் திகதி மாலை யாழ் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ள திருநாவுக்கரசு நாயனார் புராணப் பூர்த்தி விழாவின் போது பூசை பிரசாதத்துடன் சொற்பொழிவுகளும் இடம் பெற உள்ளன. அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் ஆதரவுடன் யாழ். இந்துக் கல்லூரியில் வாரந்தோறும் நடைபெற்று வரும். பெரிய புராண வகுப்பில் ஓர் அங்கமாக இடம் பெறும். திருநாவுக்கரசு நாயனார் புராணம் அன்று பூர்த்தியாகிறது. திரு. ம. ஸ்ரீகாந்தா முதலியார் செ. முத்துத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

### நூல்நிலைய புனருத்தாரண சபை நியமனம்

யாழ்ப்பாணம் செவ்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி நூல் நிலையத்தை அண்மையில் வடமாநில கல்வி அதிபதி திரு மஹாதேவா நேரில் சென்று பார்வையிட்டு நூல் நிலையத்தை புனருத்தாரணம் செய்வதற்கு சபை ஒன்றை நியமித்துள்ளார்.

நூல்களை, பொருட்காட்சிப்பகுதி பரிசீலனைக்குரிய நூற்பகுதி. வாசகர்களுக்கு உகந்த நூல்கள் விநியோகப் பகுதி, நூல்கள், சஞ்சிகைகள் பழுதுபார்த்தல், விலக்கிவைத்தல்பகுதி என 4 வகைகளாக நூல் நிலையம் பிரிக்கப்படவிருக்கிறது

புனருத்தாரண சபை உறுப்பினர்களாக கல்லூரி அதிபர் முன்னாள் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக அதிபர் திரு சிவபாலன் நூல் நிலைய விரிவுரையாளர் திரு எஸ் பாக்கியநாதன் திரு ஆ இராசதுரை ஆசிரியர் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்

### அரியாலையில் மு. போ. வாலிபர் சங்கம்

அரியாலை, திங்கள்

அரியாலையில் முற்போக்கு வாலிபர் சங்கமொன்று நேற்று முன்தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

### ஓய்வு பெற்ற அதிபருக்கு பாராட்டு

தாவடி, திங்கள்

"நல்லவழியில் மாணவர் சமுதாயம் வளர்ச்சி பெறுவதற்கு அயராது உழைத்தவர் இளைப்பாறிய அதிபர் திரு. சி. க. கந்தசாமி தானுண்டு தன்வேலையுண்டு என்று மாத்திரம் எண்ணாது, தன் மூச்சிலும் பேச்சிலும் மாணவர்களின் வளர்ச்சி பற்றியும், கல்லூரியின் உயர்ச்சி பற்றியும் சிந்தித்துச் செயலாற்றியவர் அவர்" என்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து இளைப்பாறிய திரு. சி. க. கந்தசாமியின் சேவைநலம் பாராட்டு விழாவில் உரையாற்றிய ஆசிரியர் திரு. ஐயாத்துரை சரவணபவான் கூறினார்.

தற்போதைய அதிபர் திரு பி எஸ் குமாரசாமி, உப அதிபர் திரு இ குணபாலசிங்கம், பண்டிதர் திரு மு சின்னத்தம்பி திரு ஹண்டி பேரின்பநாயகம் உட்பட மற்றும் பல ஆசிரியர்களும் திரு கந்தசாமியின் சேவையைப் பாராட்டிப் பேசினர். இளைப்பாறிய அதிபர் திரு சி க கந்தசாமி தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். மதிய போசன விருந்தும் அளிக்கப்பட்டது.

ஈழநாடு

சாதாரண வருடம் ஆனி மாதம் 8ம் திகதி (22-6-71)

## ஒரு நல்ல முன்மாதிரி

மேற்கு ஜெர்மனியிலே நாய்கள் உள்ளிட்ட மிருகங்களைப் பாதுகாக்கும் ஒரு மசோதா கொண்டு வரப்பட இருக்கிறதாம்; அச்சட்டப்படி நாய்களின் வால்களை வெட்டுவதும், காதுகளை அறுப்பதும் தடைசெய்யப்படுமென்றும், இதை மீறுபவர்களுக்கு 2 வருட சிறைத் தண்டனையும் சுமார் 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படுமென்றும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

இவ்விஷயம் நம் இலங்கையிலுள்ள நாய்களுக்குத் தெரியுமாயின் அவை நன்றியுடன் பாராட்டி இந்த நல்ல முன் மாதிரியை இங்கும் பின்பற்றவேண்டுமென்றும் விரும்பும். "மனிதனின் விசுவாசமுள்ள நண்பன்" என்று புகழ்பெற்ற நாய்கள், நாயாகப் பிறந்துவிட்ட பாவத்துக்காக இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் கொல்லப்படுகின்றன. வெறிநாய்த் தொல்லையை நீக்கவே இவ்விதம் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது இது எவ்வளவு தூரம் சரி என்பதைப் பற்றி இங்கு நாம் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் நாய்களைக் கொடுமையான முறையில் பிடித்து, கொல்லும் கண்றாவி சகிக்கமுடியாததாகும் அவற்றைக் கொல்லத்தான் வேண்டுமாயின், அவற்றுக்கு அதிக இம்சையில்லாத முறையில் செய்யப்படாதா?

'அகிம்ஸா பரமோ தர்மம்' என்று எல்லா உயிர்களிடத்தும் அன்புபாராட்டுவதையே முதற் கொள்கையாகக் கொண்ட பௌத்த சமயத்தைப் பாதுகாத்து வளர்க்கவேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடமை என்று புதிய அரசியல் தகல் திட்டமும் கூறுகின்றது மேற்கு ஜெர்மனியில் மேற்குறித்த சட்டம் நிறைவேறியதைக் கண்டபின்பாவது, அந்த மேலான முன்மாதிரியைப் பின்பற்றி இங்கும் நாய்கள் உள்ளிட்ட எல்லா மிருகங்களுக்கும் கொடுமானவரை இம்சை செய்யாமல் தடுக்க தக்க சட்ட திட்டங்களைச் செய்து அவற்றை அமுல் நடத்துவது அவசியமாகும் சமயம் வளருவதும் பாதுகாக்கப்படுவதும் அவை கூறும் மேலான கோட்பாடுகளைப் பின்பற்றி நிறைவேற்றுவதில்தான் அடங்கியிருக்கும்

### இன்னும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விவாதத்தை முடித்து வைத்த பிரதமர் ஸ்ரீமாவோ பேசுகையில் கூறியதாவது:

இந்தியர்களை அனுப்புவதில் நாட்டுக்கு கஷ்டங்கள் இருப்பினும் அவர்களை விரைவில் அனுப்பவே நாம் நடவடிக்கை எடுக்கிறோம். ஒப்பந்தக் காலக்கெடுவுக்குள்ள 9 வருட காலத்தில் இதை நிறைவேற்றிவிடுவோம். ஒப்பந்த அமுலுக்கு இந்தியா தயார் நிலையில் இல்லை என்று கூறுவது தவறு. இந்தியா தயார் நிலையிலிருப்பதுடன், இங்கிருந்து வெளியேறும் இந்தியர்களைப் பொறுப்பேற்கவும் அவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்துகொடுக்கவும் பல திட்டங்களை இந்திய அரசு உருவாக்குகிறது' என்றார்.

இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களை, வேலைக்கு வைத்திருப்பவர்களுக்கு 2 வருடம்முதல் 5 வருடகால சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டும் என்று இலங்கை - இந்திய ஒப்பந்த திருத்த மசோதாவில் இடம் பெற்றுள்ள ஷரத்தை நீக்கிவிடவேண்டும் என்று நியமன எம். பி. திரு. அஸீஸ் பேசுகையில் கூறினார். திருத்த மசோதா சகல கட்டங்களிலும் நிறைவேறியது.

### மரண அறிவித்தல்

திரு. செ. தில்லையம்பலம்

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குளாயைச் சேர்ந்த திரு செல்லப்பா தில்லையம்பலம் இளைப்பாறிய ஆசிரியர் காலமானார். இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், கணேஸ்பரன், தேவசிரோமணி, காலம் சென்ற ஜெகதாம்பிகை, கமலாம்பிகை, நகுலாம்பிகை ஆகியோரின் தந்தையும், சத்தியசீலன், பரமேஸ்வரி, தவமணி ஆகியோரின் மாமனும் ஆவர். சமக்கிரியைகள் 22-6-71 பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தகவல் கணேஸ்பரன் 2498

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி ... 63-ம் இலக்கத்திலுள்ள ... அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.